# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாதஇதழ்
Tamil Monthly


| மலர்: 01 | இதழ்: 02 | டிசம்பர் 2022 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை |
|---|---|---|---|---|---|
| Volume: 01 | Issue: 02 | December 2022 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai |





## ஜி20 நாடுகளின் தலைமை பொறுப்பு




www.penakural.com

## ஆன்மீகமும் வீரமும் நிறைந்த மாவட்டம்!

## என் மீது நம்பிக்கை வைக்கும் மக்கள்:

## முதல்வர் நெகிழ்ச்சி




## ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமி பக்தர்களுக்கு ஓர் நற்செய்தி !

### "தானத்தில் சிறந்த தானம் பூ தானம்"

என்பது ஆன்றோர் வாக்கு - ஒரு தனி மனிதனுக்கு பூ தானம் செய்தாலே தானம் செய்தவனின் ஏழு தலை முறைகளுக்கும் புண்ணியம் சென்று அடையும் என்றால், ஒரு யதிகளுக்கு, அதிலும் ஸ்ரீ கலியுக கல்பதரு என்று பிரஸித்தியான ஸ்ரீ குருராஜருக்கு பூதானம் செய்தால் அதனால் ஏற்படும் புண்ணியத்தை என்னவென்று சொல்லுவது.

**"யதிர் யத்ர க்ருஹே புங்தே தத்ர புங்தே ஹரிஸ்வயம் !**
**ஹரிரியத்ர க்ருஹே புங்தே தத்ர புங்தே ஜகத்ரயம்" !!**

எந்த ஒரு இடத்தில் யதிகள் உணவு அருந்து கின்றாரோ அங்கு ஸாக்ஷாத் ஸ்ரீ ஹரியே வந்து உணவு அருந்துவதர்க்கு சமம். எங்கு ஸ்ரீ ஹரியே உணவு அருந்துகின்றாரோ அங்கு மூன்று உலகமுமே உணவு அருந்தியதற்கான புண்ணியம் கிட்டும் என்றால் ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்த்ரருக்கு நித்யப்படி பூஜை, பாராயணம், நைவேத்யம், அன்னதானம், முதலான நற்காரியங்கள் செய்ய ஒரு சிறந்த இடத்தினை கட்டி தந்தால் அது எப்பேற்பட்ட புண்ணியத்தை தரும் என்று எவராலும் சொல்லிட இயலாது. அப்படி நம்மால் ஒரு கட்டிடம் (பவனம்) கட்டித்தர இயலுமா என்றால் அது முடியும் என்று எல்லா பக்தர்களுக்கும் இந்த புண்ணியம் கிடைக்க செய்கின்ற வழியில், அதுவும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதியின் ஸன்னிதானத்தின் மிக அருகாமையிலுள்ள **ஸ்ரீ தக்ஷிண மந்த்ராலயம்** என்று பிரஸித்திப் பெற்ற ஸ்ரீ மடத்தின் பின்புறத்தில் பக்தர்களுக்காக பூஜா மண்டபம், த்யான மண்டபம் மற்றும் அன்னதானக்கூடம் கட்ட உத்தேஸித்து ஸ்ரீ ஸ்ரீ ஸுயதீந்த்ர தீர்த்தரின் அருளாசிபெற்ற ஸ்ரீ ஸ்ரீ 1008 ஸ்ரீ ஸுபுதேந்த்ர தீர்த்தரின் ஆக்ஞையின் பேரில் கட்டிடம் கட்டும் திருப்பணி நடைபெற்று வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### ! தர்மோ ரக்ஷதி ரக்ஷிதஹ : !

| | |
|---|---|
| சுமார் 12,000 சதுர அடியில் கட்டிடம் கட்டுவதற்காக ஆகும் செலவு (அதாவது **தியான மண்டபம், பூஜா மண்டபம்** மற்றும் **அன்னதானக்கூடம்**) | **ரூ.3 கோடி** |
| **ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு** | **ரூ. 2,500/-** |

ஆதலால் பக்தர்கள் தங்களுடைய சக்திக்கேற்றபடி தாராள மனத்துடன் இந்த அரிய புண்ணிய காரியத்திற்கு நன்கொடைகளை காசோலையாகவோ வரைவோலையாகவோ /பணமாகவோ/ பொருளாகவோ கொடுக்கலாம்.

**In Favour of "Sri Raghavendra Swamy Mutt"**

என்ற பெயரிலும் அல்லது நீங்கள் இருந்த இடத்திலிருந்தே நேரடியாக
**SB A/c.No.0914101127013, IFSC:CNRB0000914, Canara Bank, Triplicane Branch, Chennai**
என்ற வங்கி கணக்கிற்க்கும் கட்டலாம் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு : 28440528 / 9620391337

# பேனா குரல்
## PENA KURAL

**தமிழ் மாத இதழ்**

R.Dis. No.: 939/2022

மலர்-01 இதழ்-02 டிசம்பர்-2022 விலை: ₹20/-

வெளியீட்டாளர்: **NV சிவசங்கர்**

ஆசிரியர்: **ராதிகா S**

நிர்வாக ஆசிரியர்: **P. கார்த்திகேயன்**

துணை ஆசிரியர்கள்:

**துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின் T.சிவக்குமார், M.அறிவுநிதி, M.J.சேகர்**

தலைமை நிருபர்கள்:

**B.மணிகண்டன், S.தமிழினி, தங்கராஜ், G.தீபக், M.திலிப் குமார், N.விஜயலட்சுமி, V.சந்தோஷ் குமார், தங்கராஜ், P.ஜேசுராஜ், J.தனசேகர்**

நிருபர்கள்:

**B.சரவணன், S.தமிழ் மணி, U.சரவணன், R.ஹரிகிருஷ்ணன், K.கலைமணி, D.பாமா, P.அசோக்குமார், ஜெபசீலன், K.சுபுலட்சுமி, S.தமிழ் வீரன், A.ஐயப்பன், S.அன்பு மணி, R.பிரகாஷ், T.அஜி, V.கண்ணபிரான், S.கார்த்திக், P.முகிலன், K.மணிமித்ரன்**

புகைப்பட நிருபர் : **V. கவியரசன்**

சட்ட ஆலோசகர்: **G. நாகராஜ்** B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *RS Sun Printz*

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:
**பேனா குரல்**
**7/13, பொன்மனசெம்மல் தெரு,**
**எம்.ஜி.ஆர் நகர், சென்னை,**
**தமிழ் நாடு, இந்தியா - 600078.**

தொடர்புக்கு:
044 43051155, 8754582123
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
**தமிழ் நாடு, இந்தியா - 600097.**



★ பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.

★ பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.




# ஏமாறுவது அரசா? மக்களா?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரகப்பகுதிகளில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஆண்டில் நூறு நாள்கள் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் இந்தத் திட்டம் 2005-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திறன் தேவைப்படாத, உடலுழைப்பின் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்களில் இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படும். வருகைப் பதிவேட்டில் போலியாக பெயர்கள் சேர்க்கப்பட்டும் பணம் கொள்ளை அடிக்கப்படுகிறதா?. கர்நாடகத்தில் 2012-ஆம் ஆண்டு 10 லட்சம் போலி பணி அட்டைகள் கண்டறியப்பட்டன. இதனால், அரசுக்கு ரூ.600 கோடி இழப்பு ஏற்பட்டது. இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்றதுதான். இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நாடாளுமன்ற நிலைக்குழு தனது அறிக்கையை இந்த ஆண்டு தொடக்கத்தில் தாக்கல் செய்தது. அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் கவலை அளிப்பவையாக உள்ளன. இந்தத் திட்டத்தில் என்ன வகையான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை கிராமசபைகளே தீர்மானிக்க வேண்டும். அந்தத் திட்டங்கள் குறித்து கிராமசபை அவ்வப்போது சமூகத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தியா முழுவதும் உள்ள சுமார் 2.50 லட்சத்துக்கும் அதிகமான கிராம பஞ்சாயத்துகளில் 2020-21-ஆம் ஆண்டில் 29,611 கிராம பஞ்சாயத்துகளில் மட்டுமே குறைந்தபட்சம் ஒரு முறை சமூகத் தணிக்கை நடைபெற்றுள்ளது.

"நூறு நாள் வேலைத் திட்டம்' என்று இது அழைக்கப்பட்டாலும், எந்த மாநிலத்திலும் ஒரு குடும்பத்துக்கு ஆண்டுக்கு நூறு நாள் வேலை வழங்கப்படுவதில்லை. சராசரியாக 50 முதல் 60 நாள்தான் வேலை வழங்கப்படுகிறது. 2020-21-ஆம் ஆண்டில் 755 லட்சம் குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்றபோதும் அவற்றில் 72 லட்சம் குடும்பங்கள்தான் நூறு நாள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளன. விலைவாசி உயர்வுக்குத் தகுந்தாற்போல ஊதிய உயர்வு அளிக்கப்படாதது இந்தத் திட்டத்தில் உள்ள மற்றொரு குறைபாடு. வெவ்வேறு மாநிலங்களில் ஊதியம் ரூ.193 முதல் ரூ.318 வரை வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் ஊதியமும் உரிய காலத்துக்குள் அளிக்கப்படுவதில்லை. 2020-21-ஆம் ஆண்டில் ரூ.4,060 கோடி ஊதியம் நிலுவையில் உள்ளதையும், கட்டுமானப் பொருள்களுக்கு ரூ.9,000 கோடி நிலுவையில் உள்ளதையும் நாடாளுமன்ற நிலைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இத்திட்டத்தை வெளிப்படைத்தன்மையுடன் சிறப்பாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 16 ஆண்டுகளாக பல லட்சம் கோடி ரூபாய் மக்களின் வரிப் பணம் இதற்காக செலவழிக்கப்பட்டு வருகிறது. இதில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட்டு, திட்டம் முறைப்படுத்தப்படாவிட்டால் அது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# ஆன்மீகமும் வீரமும் நிறைந்த மாவட்டம் என் மீது நம்பிக்கை வைக்கும் மக்கள்: முதல்வர் நெகிழ்ச்சி




மாவீரன் பூலித்தேவன் பிறந்த வீரம் நிறைந்த மண் தென்காசிக்கு வருவதில் பெருமை கொள்கிறேன் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே என்மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்றும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் ரூ.182 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ரூ.34 கோடியில் 23 திட்டங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். ரூ.22 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை முதல்வர் துவக்கி வைத்தார்.

விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், இயற்கைக்கும், வீரத்துக்கும், ஆன்மீகத்துக்கும், வேளாண்மைக்கும் புகழ்பெற்ற தென்காசிக்கு வந்ததில் பெருமை கொள்கிறேன். மாவீரன் பூலித்தேவன் பிறந்த வீரம் நிறைந்த மண் தென்காசிக்கு வருவதில் பெருமை கொள்கிறேன் என கூறினார்.

இயற்கை எழில் கொஞ்சக்கூடிய மாவட்டம் தென்காசி மாவட்டம். அதிக அளவில் அருவிகள், அணைகள் இருக்கும் மாவட்டம் தென்காசி என முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டினார். குற்றாலத்தில் ஆண்டுதோறும் அரசு சார்பில் சாரல் விழா கொண்டாடப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார். தென்காசி விழாவில் ரூ.182.56 கோடியில் 1,03,508 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு விழாவில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

திமுக அரசின் திட்டங்களை பட்டியலிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். பூலித்தேவனுக்கு மணிமண்டபம் அமைத்துக் கொடுத்தவர் கலைஞர் என முதல்வர் கூறினார். பசும்பொன் முத்துராமலிங்க கல்லூரியை ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து மீட்டது தான் திமுக அரசு எனவும் ஸ்டாலின் தெரிவித்தார். தென்காசி மக்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும். இனாத்தூர் பெரிய ஏரி சுற்றுலா தலமாக ரூ.10 கோடி செலவில் மேம்படுத்தப்படும். புளியங்குடி - சங்கரன்கோவில் இணைப்பு சாலை மேம்படுத்தப்படும். தென்காசி மாவட்டத்துக்கு புதிய விளையாட்டு வளாகம் அமைக்கப்படும். ஆலங்குளத்தில் புதிய வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தென்காசி மாவட்டத்தில் 11,490 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் 80 லட்சம் முறை கட்டணமின்றி நகரப்பேருந்துகளில் பெண்கள் பயணித்துள்ளனர் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

– M. திலிப் குமார்

# சமூக ஊடகக் கணக்குகள் சரிபார்ப்பு கட்டாயமாகும்




சமூக ஊடகங்களை பயன்படுத்துபவர்களின் ரகசியம் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியம். அதே வேளையில், பொறுப்பற்ற நிலையில் பொதுத்தளத்தில் சட்டத்திற்கு புறம்பான தகவல்களை பகிர்ந்தால் சட்டத்தின்படி தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இதனை உறுதிசெய்வதற்கு தகவல் தொழில்நுட்பம் விதிகள், 2021 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இணைய தளத்தை பயன்படுத்துபவர்களுக்கு வெளிப்படையான, பாதுகாப்பான நம்பத்தகுந்த சமூக ஊடகக் கணக்குகள் இருக்க வேண்டும் என்பதை அரசு முனைப்போடு செயல்பட்டு அதற்கு செயலாக்கம் தரும் வகையில் தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021-ல் கொண்டு வரப்பட்டது.

(i) பகிரப்படும் தகவல்கள் அறிந்தோ, அறியாமலோ, தகவல்களை பெறுபவர்களை ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ, காட்சிப்படுத்தவோ, பதிவேற்றவோ, மாற்றவோ, வெளியிடவோ, அனுப்பவோ, சேமிக்கவோ, புதுப்பிக்கவோ அல்லது பகிரவோக் கூடாது. பொய்யான, தவறாக வழிநடத்தும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

(ii) மேற்கூறியவற்றை மீறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அரசு அல்லது அதன் அமைப்பு ரீதியிலான புகார் அல்லது நீதிமன்ற உத்தரவு அல்லது நோட்டீஸ் பெறப்பட்டதன் பேரில் தானாக முன்வந்து, தகவல்களை பகிரவோ, சேமிக்கவோ அல்லது வெளியிடவோக் கூடாது. அவதூறு, பொது மக்கள் நலன், கண்ணியம், ஒழுக்கம், மீறப்படும் போது தகவல் தொழில்நுட்ப சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

(iii) சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்திடமிருந்து உத்தரவு கிடைத்தவுடன், சட்டத்தின் கீழ் தடுப்பு, கண்டறிதல், விசாரணை அல்லது வழக்குத் தொடர தகவல் அல்லது உதவி வழங்கப்படும்.


(iv) இது சம்பந்தமாக புகாரளித்த 72 மணி நேரத்திற்குள் தீர்க்க வேண்டும்.

இந்த தகவலை நாடாளுமன்றத்தில் மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ராஜீவ் சந்திரசேகர் எழுத்துப்பூர்வமாக அளித்த தகவலில் தெரிவித்துள்ளார்.

– V. சந்தோஷ் குமார்

# இந்திய திரைப்பட வரலாற்றில் முதல்முறையாக பூர்வீக பழங்குடியின மக்கள் நடித்த திரைப்படம்

## "தாபரி குருவி"










பழங்குடியின மக்களின் கதைக்களத்தை பின்புலமாக கொண்ட "தாபரி குருவி" என்ற திரைப்படத்தின் கதாபாத்திரங்களில் பூர்வீக பழங்குடியின மக்களே நடித்துள்ளனர். சமூக கட்டமைப்பில் பழங்குடியின மக்களிடையே நிலவும் ஏற்க முடியாத நடைமுறைகளை எதிர்த்து போராடும் ஒரு பழங்குடியின சிறுமியின் போராட்டமே இந்த திரைப்படத்தின் கதையாகும். 53-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், இந்திய பனோரமா பிரிவில் "தாபரி குருவி" திரையிடப்பட்டது. இருளர் பழங்குடியின மொழியிலேயே இந்த திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்படத்தின் இயக்குநரும், தேசிய விருது பெற்றவருமான திரு. பிரியானந்தன், பத்திரிகை தகவல் அலுவலகம் ஏற்பாடு செய்த "டேபிள் டாக்ஸ்"- நிகழ்வில், செய்தியாளர்களுடனும், பங்கேற்பாளர்களுடனும் கலந்துரையாடினார். அவர் பேசும்போது, "பழங்குடியின சிறுமிகளின் போராட்டம்மிக்க வாழ்க்கையை வெளிக்கொணர்ந்து மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதே என்னுடைய உண்மையான ஆசையாகும். இந்த திரைப்படத்தின் திரைக்கதை முதலில் மலையாளத்தில் எழுதப்பட்டு, பின்பு இருளர் மொழியில் மாற்றம் செய்யப்பட்டது. பழங்குடியின மக்களுக்கு நடிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு படைப்புத் திறனாளி இருக்கிறார். நான் அவர்களுக்கு நடிக்க சொல்லி கொடுக்கவில்லை. மாறாக அவர்கள் அவர்களாகவே வாழ்ந்துள்ளனர். நான் எதிர்பார்த்ததை காட்டிலும் அவர்கள் சிறப்பாக நடித்தனர். மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மொழி ஒரு தடையே அல்ல".

"இத்திரைப்படத்தில் கேரளாவில் உள்ள இருளர், முடுக்கர், குறும்பர், வடுகர் போன்ற பழங்குடியின மக்கள் நடித்துள்ளனர். அவர்களில் சிலர் இதுவரை தங்களது வாழ்நாளில் திரைப்படத்தையே பார்த்ததில்லை. இந்த திரைப்படத்தை அனைத்து பழங்குடியின கிராமங்களிலும் திரையிட முடிவு செய்துள்ளேன்" என்றார். இந்த திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்த மீனாட்சி மற்றும் சியாமினி, ஒளிப்பதிவாளர் அஸ்வகோஷன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

– S. தமிழினி

# அய்யனார் கோயிலுக்கு சொந்த நிலத்தை வழங்கிய இஸ்லாமியர்





கீழக்கரை அருகாமையில் திருப்புல்லாணி ஒன்றியத்துக்கு உட்பட்ட காஞ்சிரங்குடி கிராமம் மேலவலசை காலனி அருகே ஸ்ரீ பொன்னும் சிறை எடுத்த ஐயனார் திருக்கோயில் அமைந்துள்ளது. அந்த கோயிலின் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராம மக்களுக்கு அந்த கோயில் வழிபாட்டு தளமாகும். அந்த கோயிலுக்கு பொதுமக்கள் செல்வதற்கு சரியான பாதை இல்லாமல் இருந்து வந்தது.

அந்த கோயிலுக்கு செல்வதற்கு பாதைகள் இல்லாததால் கீழக்கரை இஸ்லாமிய ஹாஜி முஹம்மது சுஜபுக்கு சொந்தமான இடத்தை கடந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருந்து வந்தது. அதனால் அந்த கிராம மக்கள் நீண்ட காலமாக அங்கு வரக்கூடிய பக்தர்கள் நில உரிமையாளரை சந்தித்து பாதை வேண்டி கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை அடுத்து அவர் குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து ஒருமனதாக கோயிலுக்கு செல்வதற்கு அவரது 8 சென்ட் நிலத்தை பாதைக்காக தானமாக வழங்கி உள்ளார். அவரது இந்த செயல் சமூக நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளது.

அதைப் போலவே காஞ்சிரங்குடி அருகே பக்கிரேப்பா தர்கா அமைந்துள்ளது. அப்பகுதி அருகே முத்தையர் நகர் கிராம மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். மேலும் அவர்கள் செல்லுவதற்கு வழிகள் ஏதும் இல்லாமல் கடல் வழியாகவே நீண்ட காலமாக பயன்படுத்தி உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு ஹாஜி முகம்மது சுஜபு தன்னுடைய சொந்த நிலத்தில் இருந்து தார் சாலை அமைப்பதற்கு இடம் கொடுத்து உள்ளார்.

இது குறித்து ஹாஜி முகம்மது சுஜபு கூறுகையில், கீழக்கரையில் எங்கள் முன்னோர்கள் சமூக நல்லிணத்தை பேணிப் பாதுகாத்து வந்தனர். எந்த ஒரு பாகுபாடும் இல்லாமல் ஒற்றுமையோடு சகோதரத்தோடு வாழ வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கமாக உள்ளது.

அதே சமயத்தில் இனிவரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையோடு சகோதரத்துவத்தோடு வாழ வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என்று கூறினார். இது போன்ற உயர்ந்த மனதுடன் தங்களது நிலத்தை தானமாக வழங்கிவரும் செயலைக் கண்டு அப்பகுதி மக்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்.

– D.பாமா

# ஜி20 நாடுகளின் தலைமை பொறுப்பு



இந்தோனேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு எப்போதுமே உண்டு. 1955-இல் இந்தோனேஷிய பாண்டுங் நகரில் நடந்த ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டில்தான், அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேருவால் முன்மொழியப்பட்ட அணிசாரா நாடுகளின் கூட்டமைப்பு உருவானது. இப்போது அதே இந்தோனேஷியாவின் பாலி தீவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில், அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பு சுழற்சி முறையில் இந்தோனேஷியாவிடமிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறது.

மிக முக்கியமான சர்வதேச அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருப்பதை வரவேற்கும் விதத்தில், டிசம்பர் முதல் தேதி காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலான 100 முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் ஜி20 இலச்சியுடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. 'ஒரே உலகம், ஒரே குடும்பம், ஒரே வருங்காலம்' என்கிற இந்தியா அறிவித்திருக்கும் முத்திரை வாக்கியம், 'வசுதைவ குடும்பகம்' (அனைவரும் ஒரே குடும்பம்), 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' ஆகியவற்றின் உணர்வைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

அடுத்த ஓராண்டில் இந்தியாவின் பல பகுதிகளில் ஜி20 தொடர்பான கூட்டங்கள் நடத்தப்பட இருக்கின்றன. அடுத்த ஆண்டு செப்டம்பரில் நடக்க இருக்கும் இறுதிக் கூட்டத்தில் ஜி20 உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் தில்லியில் பங்குபெற இருக்கிறார்கள். இடைப்பட்ட ஓராண்டு காலத்தில், தனது தலைமைப் பொறுப்பின் கீழ் இந்தியா எப்படி செயல்படப்போகிறது என்பதை ஒட்டுமொத்த உலகமும் உற்று நோக்குகிறது.

ஜி20 என்கிற சர்வதேச அமைப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு விடலாகாது. உலக ஜிடிபி-யில் 85%, சர்வதேச வர்த்தகத்தில் 75%, மொத்த மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு என்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்த பெரிய சர்வதேச அமைப்பு

இது. 1999-இல் ஆசியப் பொருளாதாரம் தடுமாற்றத்தை எதிர்கொண்டபோது உருவாக்கப்பட்ட அமைப்பு. இப்போது உலகின் வல்லரசு நாடுகளும், வளர்ச்சி அடையும் நாடுகளும் ஒருசேரப் பங்குபெறும் அமைப்பாக வலுப்பெற்று விளங்குகிறது.

2008-இல் உலகம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின்போது, அதை எதிர்கொள்ள உலக நாடுகளை ஒருங்கிணைத்து செயல்பட வைத்ததில் ஜி20-இன் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அதற்குப் பிறகு அமெரிக்கா, சீனா, ரஷியா மூன்று நாடுகளும் தனித்தனியே செயல்படத் தொடங்கியதால் ஜி20-இன் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. அதை மீட்டெடுக்கும் மிக மிக்கியமான பணி இந்தியாவை இப்போது எதிர்கொள்கிறது.

சர்வதேச பொருளாதார ஸ்திரத்தன்மையும், தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டின் பயன் அனைத்து நாடுகளைச் சென்றடைவதும்தான் ஜி20 அமைப்பின் அடிப்படை நோக்கம். உக்ரைன் - ரஷியப் போர் காரணமாக எரிபொருள், உணவுப் பொருள்கள், உரங்கள் ஆகியவற்றின் தட்டுப்பாட்டால், பல நாடுகளின் பொருளாதாரம் இப்போது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

உடனடியாகப் போரை நிறுத்த முடியாவிட்டாலும், இடைக்கால நிறுத்தமாவது அவசியமாகிறது. 'இது போருக்கான காலமல்ல' என்கிற பிரதமர் நரேந்திர மோடியின் எஸ்.ஜி.ஓ. மாநாட்டு அறிவிப்பு, பாலி ஜி20 மாநாட்டிலும் எதிரொலித்தது. அதை உறுதிப்படுத்தும் பொறுப்பு இப்போது பிரதமரிடமே வழங்கப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத் தடையால் உணவுப் பொருள்கள், உரங்கள் உள்ளிட்டவை தடை செய்யப்படாமல் இருந்தால், கருங்கடல் வழியாக உணவுப் பொருள்களை உக்ரைன் ஏற்றுமதி செய்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று ஜி20 மாநாட்டில் ரஷியா தெரிவித்திருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டு, உக்ரைன் - ரஷியப் போர் நிறுத்தத்தை இந்தியா கொண்டு செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

தனது பெரும் பொறுப்பைப் பிரதமர் நரேந்திர மோடி நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை பாலியில் நடந்த ஜி20 மாநாட்டில் அவரது நடவடிக்கைகள் வெளிப்படுத்தின. 2020-இல் சீனா நடத்திய ஆக்கிரமிப்பைப் பெரிதுபடுத்தாமல் சீன அதிபர் ஷீ ஜின்பிங்குடன் அவர் கைகுலுக்கியபோது, தலைமைப் பொறுப்பின் பெருந்தன்மை வெளிப்பட்டது.

உக்ரைனை ஆதரித்து, ஆயுதங்கள் வழங்கும் மேற்கு நாடுகள் ஒருபுறம், ரஷியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை அங்கீகரிக்காத சீனா, பிரேஸில், இந்தோனேஷியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி ஆகியவை மறுபுறம். இந்த இரண்டு அணிகளுக்கும் பொதுவான நாடாக இருக்கும் இந்தியாவிடம் இப்போது தலைமைப் பொறுப்பு. அதனால், சமரசம் செய்து ஒற்றுமைக்கு வழிகோலும் வாய்ப்பு இந்தியாவுக்கு நிறையவே இருக்கிறது.

கொள்ளை நோய்த்தொற்று, போர் போன்றவற்றை தடுத்து நிறுத்தவும், எதிர்கொள்ளவும் சர்வதேச நாடுகள் இணைந்தும் இசைந்தும் பணியாற்றும் சூழல் உறுதிப்பட்டால் மட்டுமே பொருளாதாரத்துக்கு ஏற்படும் அதிர்ச்சிகளை எதிர்கொள்ள முடியும். பணவீக்கம், சீனாவின் வளர்ச்சியில் பின்னடைவு, உக்ரைன் - ரஷியப் போர் ஆகிய மூன்றும்தான் உலகம் பொருளாதாரம் இப்போது பின்னடைவை எதிர்கொள்ளக் காரணங்கள் என்கிறது சர்வதேச நிதியம்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கிற புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் தொலைநோக்குப் பார்வை உலக நாடுகளின் பார்வையாக மாறுவதை உறுதிப்படுத்தும் பெரும் பொறுப்பு ஜி20 தலைமை மூலம் இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது. கால அவகாசம் குறைவாக இருக்கலாம். முனைப்பும், உறுதியும், ஆளுமைத்திறனும் இருந்தால், சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்பதை பிரதமர் நரேந்திர மோடிக்குக் கற்றுத்தர வேண்டுமா என்ன?

– ஆசிரியர்

# 1990 ம் ஆண்டிற்கு முன்பு பிறந்தவர்கள் கட்டாயம் படிக்கவேண்டியவை

நிச்சயமா சிரிப்போடு கண்ணீர் வரும்! மறக்காம அனைவருக்கும் ஷேர் செய்யுங்கள். 1990 ம் ஆண்டிற்கு முன்னர் பிறந்தவர்களுக்கு மட்டும் இந்த அருமை புரியும். 1990க்கு முன்பு நம் வாழ்க்கை எப்படி இருந்தது.

* காலை எழுந்ததும் பசும்பால் வாங்க அப்பா வரிசையில் நின்றிருந்தார்.

* வாங்கி வந்த தண்ணீர் கலக்காத பாலில், அம்மா டீ போட்டு கொண்டு வந்தார். குடும்பத்துடன் அமர்ந்து டீ குடிப்பதை கூட அவரவர் முகத்தை பார்த்து ரசித்து குடித்தோம்.

* ஆர்ப்பாட்டமே இல்லாமல் நாம் அனைவரும் தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு கூட நடந்தே சென்றோம்.

* ஆசிரியரின் மீது மரியாதையும் பயமும் இருந்ததே தவிர ஒரு நாளும் ஆசிரியரை தரக்குறைவாகவோ, இழிவாகவோ ஒரு மாணவனும் நினைத்ததில்லை.

* பள்ளி முடித்து வீட்டுக்கு வந்ததுமே, பையை தூக்கி போட்டுவிட்டு தெருவில் கும்பலாக விளையாடினோம்.

* விளையாட்டில் கூட ஆங்கிலம் கலக்காத தமிழ் நம் அனைவர் நாவிலும் வீரியமாக தொற்றியிருந்தது.

* மாலை 4 மணிக்கு மேல் நம் அக்கா தங்கைகளுக்கு அம்மா அழகாக சடை போட்டுவிட்டார்.

* உதிரியாக வாங்கிய பூக்களை (மல்லி மற்றும் பிச்சிப்பூ) வாழை நாறால் சிறுசிறுக கட்டி, அதை அக்கா தங்கைக்கு அம்மாவே தன் கையால் வைத்து அழகு பார்த்தார்.

* மாலையில் நம் தாத்தாவும் அப்பாவும் ஒன்றாக அமர்ந்து தூர்தர்ஷனில் செய்திகள் பார்த்தார்கள்.

* வெள்ளிக்கிழமையன்று, குறைந்தபட்சம் 10பேராவது ஒன்றாக அமர்ந்து இரவு ஒளியும் ஒலியும் பார்த்தோம்.

* அம்மாக்களுக்கு அன்று சீரியல் என்றாலே என்னவென்று பொருள் தெரியாமல், வீட்டு வாசலில் அமர்ந்து நம் விளையாடுவதை வேடிக்கை பார்த்தனர்.



* ஊற வைத்த அரிசியை ஆட்டுக்கல்லில் போட்டு அம்மா இட்லிக்கு மாவை அரைத்தார்.

* அதிகபட்ச அப்பாக்களுக்கு சிகரெட் மற்றும் குடிப்பழக்கம் இல்லாமல் இருந்தது.

* ஞாயிற்றுகிழமை மதியம், தூர்தர்ஷன் மாநில மொழி திரைப்படத்தில் தமிழ் படம் வராதா என ஏங்கி இருக்கிறோம்.

* ஞாயிறு மாலை டிவியில் திரைப்படம் பார்ப்பதால் தெருவில் ஈ காக்கைகள் கூட பார்க்க முடியாத சூழ்நிலை இருந்தது.

* ஞாயிறு பார்த்த படத்தை பற்றிய விவாதம் திங்களன்று பள்ளி நண்பர்களிடத்தில் தொடர்ந்துகொண்டே இருந்தது.

* உறவினர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களுக்காக வாங்கிய குளிர்பானத்தில் நமக்கும் கொஞ்சம் தருவார்கள் என காத்து கொண்டிருந்தோம்.

* தீபாவளி ரம்ஜான் என பண்டிகை காலங்களில் புதுத்துணி எடுக்க குடும்பத்துடன் ஒன்றாக சேர்ந்து போனோம். அம்மா அப்பா வாங்கி கொடுத்த துணியை மட்டுமே அணிந்து அழகு பார்த்தோம்.

* ஒரு தெருவிற்கு இரண்டு பேர் காதலிப்பதே அபூர்வமாக இருந்தது. அன்றைய காதலர்கள் காதலில் தோற்றால் தற்கொலை செய்துகொண்டனர்.

* பண்டிகை காலம் வந்தால் வாழ்த்து அட்டை (க்ரிட்டிங் கார்டு) வாங்க கடைகளில் அலை மோதினோம்.

* 10வது மற்றும் 12வது ரிசல்ட் பார்க்க தினத்தந்தி வாசலில் தவம் கிடந்தோம்.

* யாராவது செல்போன் (சாதாரண 1100) வைத்திருந்தால் அதை ஆச்சரியமாக வாங்கி தொட்டு பார்த்தோம்.

* நம் அக்காவும் தங்கையும் குதிரை வால் சடை போட்டு வீதிகளில் வலம் வந்தனர்.

* பணக்கார வீட்டு இளம் பெண்கள் BSA SLR சைக்கிள் வைத்திருந்தார்கள்.

* 10ல் குறைந்தபட்ச 8 வீட்டில் உள்ள குழந்தைகளிடம் உண்டியல் பழக்கம் இருந்தது.

* போன கரண்ட் திரும்ப வந்ததும் கை தட்டி ஆரவாரப்படுத்தினோம்.

* வருடத்திற்கு ஒருமுறை குடும்பத்துடன் சினிமாவுக்கு போவதே பெரிய விஷயமாக இருந்தது.

* வீட்டில் யாருக்காவது திருமணம் நடந்தால், கிடைக்காத எதோ ஒரு அபூர்வ பொருள் கிடைத்தது போல் மிகுந்த மகிழ்ச்சிடன் காணப்பட்டோம்.

* ஊருக்கே ஒருவரோ இருவரோதான் வெளிநாட்டில் வேலை பார்ப்பவராக இருந்தார்.

* 10ல் 8 கன்னிப் பெண்களின் தார்மீக ஆடை தாவணியாக இருந்தது.

* 10ல் 8 ஆண்களிடத்தில் வேஷ்டி கட்டும் பழக்கம் இருந்தது.

* பள்ளி விடுமுறை காலத்தை வெளியூரில் உள்ள தாத்தா, மாமா, சித்தப்பா, பெரியப்பா வீட்டிற்கு சென்று விழா போல கொண்டாடினோம்.

* கிணற்றில் குளிக்கும் பழக்கம் இருந்தது. பலருக்கு நீச்சல் தெரிந்திருந்தது. அடிக்கடி காய்ச்சல், தலைவலி வந்தது கிடையாது.

* பலசரக்கு கடைகளுக்கு போகும்போது மஞ்சள் பைகளையே உபயோகித்தோம்.

* தரையில்தான் அதிகபட்சம் உறங்கினோம். பாயை தவிர வேறொன்றை கண்டதில்லை.

* 12 மணி நேரம் உழைத்தாலும் உடலில் வியர்வை நாற்றம் வந்தது கிடையாது.

* இவை அனைத்தையும் விட அப்பா அம்மா சொல்படி கேட்டு அனைவரும் நடந்தோம்.

* உலகிலுள்ள அத்துனை வசதிகளும் அருகிலேயே இருந்தால் கூட, இன்று இவற்றில் ஒன்று கூட சாத்தியமில்லை. பழைய பொக்கிஷங்கள் ஒன்றுகூட கிடைக்கப் போவதில்லை. அன்றைய வாழ்நாள்தான் சொர்க்கம்.

– S.**தமிழ்மணி**


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |

**PENA KURAL**, Tamil Monthly

Administrative Office:

**3/885, Pillaiyar Kovil Street, (Opp Bajanai Kovil), Mettukuppam, OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**

**Ph: 044-43051155, 8754582123**

**Email: penakural@yahoo.com**

# விபத்திற்கு காரணம் போக்குவரத்து விதிமுறைகள் அலட்சியமா? தரமில்லாத சாலைகளா?



சாலை விபத்துகளைக் குறைக்கும் வகையில், போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதக் கட்டணத்தை பலமடங்கு உயர்த்த வகை செய்யும் மோட்டார் வாகன திருத்தச் சட்டம் தமிழகத்தில் அமலுக்கு வந்துள்ளது. 2019-ஆம் ஆண்டில் மத்திய அரசு கொண்டுவந்த இந்த திருத்தச் சட்டம் பல மாநிலங்களில் ஏற்கெனவே அமலுக்கு வந்துவிட்ட நிலையில், சுமார் மூன்று ஆண்டுகள் கழித்து இப்போதுதான் அரசாணை வெளியிட்டு நடைமுறைப்படுத்தியிருக்கிறது தமிழக அரசு.

இந்தியாவில் ஆண்டுக்கு ஆண்டு சாலை விபத்துகள் அதிகரித்து வருகின்றன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தகவல்படி, 2021-ஆம் ஆண்டில் சாலை விபத்துகளில் 1.55 லட்சம் பேர் உயிரிழந்தனர். நாட்டில் இதுவரை இல்லாத அதிகபட்ச உயிரிழப்பு இதுவாகும். சராசரியாகப் பார்த்தால் தினமும் 426 பேர், ஒரு மணி நேரத்துக்கு 18 பேர் வீதம் உயிரிழந்துள்ளனர். மொத்தம் 4.03 லட்சம் சாலை விபத்துகள் நடந்துள்ளன. இவற்றில் 3.71 லட்சம் பேர் காயமடைந்துள்ளனர். முந்தைய 2020-ஆம் ஆண்டில் சாலை விபத்துகளில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1.33 லட்சம்.

அதிக வேகம், போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாதது, மோசமான சாலைகள் இவைதான் சாலை விபத்துகளுக்குப் பொதுவான காரணம். இதில், போக்குவரத்து விதிமுறைகளை முறையாகப் பின்பற்றினால் ஏராளமான உயிர்கள் காப்பாற்றப்படும் வாய்ப்பு உள்ளது. ஆனால், சாலை விதிகளை அலட்சியம் செய்வதில் இந்தியாபோல ஒரு நாடு இருக்குமா என்கிற அளவுக்குதான் வாகன ஓட்டிகளின் செயல்பாடுகள் உள்ளன.

சிக்னலில் பச்சை விளக்கு எப்போது ஒளிரும் என உன்னிப்பாக கவனித்து ஒரு நொடிகூட வீணாக்காமல் சீறிப்பாயும் வாகன ஓட்டிகள், அதே மஞ்சள் விளக்கு ஒளிரும்போது கவனிப்பதோ, சிவப்பு விளக்கு ஒளிரும்போது நிற்பதோ இல்லை. ஒரு சிக்னலில் நின்று ஐந்து நிமிஷம் கவனித்தாலே வாகன ஓட்டிகளின் விதிமீறல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

புதிய மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தின்படி, 46 வகையான விதிமீறல்களுக்கு அபராதம் உயர்த்தப்பட்டுள்ளது. உரிய ஆவணங்கள் இல்லாமல் வாகனம் ஓட்டினால் முன்பு ரூ.500-ஆக இருந்த அபராதத் தொகை இப்போது ரூ.5,000-ஆக பத்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. கைப்பேசியில் பேசிக் கொண்டே மோட்டார் சைக்கிள், கார் உள்ளிட்ட வாகனங்களை ஓட்டினால் இப்போது ரூ.1000 அபராதம் விதிக்கப்படுகிறது. இதே விதிமீறலை செய்து இரண்டாவது முறை பிடிபட்டால் இனி ரூ.10,000 அபராதம் செலுத்த வேண்டும்.

கார், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களை 18 வயதுக்கு உள்பட்ட சிறுவர்கள் ஓட்டினால், அவர்களுடைய பெற்றோருக்குத் தண்டனை விதிக்கப்படும். மேலும், வாகனங்களுக்கான பதிவு ரத்து செய்யப்படுவதோடு, இந்தக் குற்றத்துக்காக 3 ஆண்டுகள் வரை சிறை மற்றும் ரூ. 25,000 வரை அபராதமும் விதிக்கப்படும் போன்றவை முக்கிய அம்சங்கள். மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டினால் இப்போது விதிக்கப்படும் ரூ.10,000 அபராதம் அதிகரிக்கப்படாமல் அப்படியே தொடர்கிறது. மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்குவது சாலை விபத்துகளுக்கான முக்கியமான காரணம். தமிழகத்தில் 2019, ஜனவரி முதல் 2022,



பிப்ரவரி வரை மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கியதாக 4.22 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.18.70 கோடி அபராதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. 2018-ஆம் ஆண்டு முதல் 2022, பிப்ரவரி வரை மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கியதால் 1,108 சாலை விபத்துகள் ஏற்பட்டு 262 பேர் உயிரிழந்துள்ளனர். சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் தமிழக காவல் துறை தாக்கல் செய்த பதில் மனுவில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமன்றி சிறிய நகரங்களிலும் இளைஞர்கள் சாலைகளில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபடுவதும், "வீலிங்' எனப்படும் அபாயகரமான சாகசத்தில் ஈடுபடுவதும் அதிகரித்துள்ளது. பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இந்த சாலை சாகசத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், ரூ.500-ஆக இருந்த அபராதம் ரூ.5,000-ஆகவும், இரண்டாவது முறை பிடிபட்டால் அபராதம் ரூ.10,000-ஆகவும் அதிகரிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

வாகனத்தை ஓட்டும்போது கைப்பேசியில் பேசிக்கொண்டே செல்லும் அபாயத்தை கண்கூடாகப் பார்க்கிறோம். வாகனத்தை இயக்கும்போது கைப்பேசியில் பேசுவதால் கவனம் சிதறுவது, பெரும் விபத்துக்கு வித்திடும் என்று தெரிந்தும் அந்தச் செயலை வாகன ஓட்டிகள் பலர் தொடர்ந்து செய்கின்றனர். இதைக் கட்டுப்படுத்தும் வகையில் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாலை விபத்துகளைக் குறைக்க போக்குவரத்து விதிமுறைகள் எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியம் தரமான சாலைகள். தேசிய நெடுஞ்சாலைகள் தவிர பெரும்பாலும் மாநில நெடுஞ் சாலைகள், ஊரக சாலைகள் பல இடங்களில் தரமாக இருப்பதில்லை. எனவே, தரமான சாலைகளை அமைப்பது அரசின் கடமை. என்னதான் சட்டங்கள் இயற்றினாலும் சமூகத்தில் குற்றங்கள் குறைந்ததாகத் தெரியவில்லை. சட்டங்களை முறையாக அமல்படுத்தாததும் இதற்கு ஒரு காரணம். ஆதலால், புதிய மோட்டார் வாகன திருத்தச் சட்டப் பிரிவுகளை சம்பந்தப்பட்ட துறையினர் முறைகேடுகளுக்கு வழியின்றி முறையாக அமல்படுத்தினால் விபத்துகள் நிச்சயம் குறையும்.

- G.தீபக்



# சித்த மருத்துவ குறிப்புகள்

பகுதி - 2

68) தோலில் ஊறல், தடுப்பு இவற்றிற்கு: ஏலரிசி பொடியை வல்லாரை இலைச்சாறு விட்டு அரைத்து காயவைத்து பின் கொட்டைக் கரந்தையை நிழலில் உலர்த்தி பொடித்து, இரண்டையும் சேர்த்து ஒன்றாக கலந்து வேளை 2 கிராம் விதம் 3 வேளை உண்ண வேண்டும்.

69) உடல் வலுவுண்டாக: சிறியவர் முதல் பெரியவர் வரை அத்தி, ஆலம், அரசு, இதன் விதைகளை சம அளவில் எடுத்து பாலில் அரைத்து 5 கிராம் காலை மட்டும் உட்கொள்ள பிற நோயிலிருந்து பாதிக்கப்பட்ட உடலையும் உரமாக்குகிறது.

70) குடற்புண் தீர்க்கும் மணத்தக்காளி: மணத்தக்காளி கீரையைச் சமைத்தோ, மணத்தக்காளிப் பழத்தை வற்றல் செய்து உணவுடன் சேர்த்து தினந்தோறும் உண்டுவர வயிற்றுப்புண் குணமாகும்.

71) தேமல் மறைய: கருங்சீரகத்தை எண்ணெய்விட்டு கருக வறுத்து அதனை காடி விட்டரைத்து பூச சொறி, தேமல் குறையும்.

72) வாயு கலைய: வெள்ளைப் பூண்டின் மேல் தோலை அகற்றி பசும்பாலில் இட்டு காய்ச்சி அருந்த வாயு கலையும்.

73) பாலுண்ணி மறைய: சிவப்பு முள்ளங்கி இலையை உலர்த்தி சருகுபோலாக்கி அதனை எரித்து சாம்பலாக்கி, சாம்பலில் கொஞ்சம் எடுத்து ஆமணக்கு எண்ணெய்விட்டு குழப்பி ஒரு வெள்ளைத் துணி மீது தடவி பாலுண்ணி மீது சில தினங்கள் போட குணமாகும்.

74) தொண்டை நோய்க்கு: கடுகை குடிநீர் செய்து தேன்விட்டு உள்ளுக்கு கொடுக்க தொண்டை நோய் நீங்கும்.

75) பௌத்திரம் நீங்க: குப்பை மேனிச் சூரணமும், திப்பிலி சூரணமும் சமஅளவு கலந்து 1கி நெய்யில் உட்கொள்ள பௌத்திரம் நீங்கும்.

76) தீச்சுட்ட புண்களுக்கு: வேப்பங் கொழுந்தைச் சிதைத்து ஆமணக்கிலையில் பொதித்து உப காந்தலில் பொதித்து வெந்த பதத்தில் எடுத்து மேற்படி புண்மேல் வைத்துக்கட்ட தீச்சுட்டபுண் ஆறிவிடும்.

77) தேக பலமுண்டாக: நத்தை சூரி விதையை அரைத்து அல்லது சூரணித்து பாலில் உட்கொண்டு வந்தால் தேக பலமுண்டாகும்.

78) படைகளுக்கு: பொன்னாவாரை வேருடன் சந்தனத்தை சேர்த்து அரைத்து தடவி வந்தால் படைகள் உதிர்ந்து மறைந்து போகும்.

79) கண்ணோய் தீர: வெள்ளை (அ) சிவப்பு நந்தியாவட்டை பூவை பிழிந்து அந்த ரசத்தை 2 - 3 துளி கணக்காய் காலை மாலை கண்களுக்கு விட்டு வர கண்ணோய் தீரும்.

80) கற்றாழை நாற்றத்திற்கு: கோஷ்டத்தைப் பசுவின் பால் விட்டரைத்து பாலில் கலக்கி உட்கொண்டு வந்தால் கற்றாழை நாற்றம் நீங்கும்.

81) சேற்று புண்ணிற்கு: மருதோன்றி இலையை அரைத்து பூச குணமாகும்.

82) நகச்சுற்று குணமாக: வெற்றிலையுடன் கற்சுண்ணாம்பு சேர்த்தரைத்து சீழ்கோர்த்த நகச்சுற்றுக்கு பூசலாம்.

83) முகப்பரு குணமாக: சங்கை பன்னீரில் உரைத்து பூசலாம்.

84) புழுவெட்டு குணமாக: அரளிச் செடியின் பாலை புழுவெட்டுள்ள இடங்களில் தடவி வர மயிர் முளைக்கும்.

85) பொடுகு குணமாக: வெள்ளை மிளகு (அ) நல்ல மிளகை பாலில் அரைத்து தலைக்குத்தடவி குளித்து வந்தால் பொடுகு வராது.

86) தழும்பு மறைய: வேப்பம்பட்டைக் கியாழத்தைக் கலக்கி அதில் வரும் நுரையை தடவி வரலாம்.

87) முறித்த எலும்புகள் கூட: வேரை உலர்த்திப் பொடித்து 2 கிராம் கொடுத்துவர, முறிந்த எலும்புகள் சீக்கிரம் கூடும்.

88) பால் சுரக்க: பால் சுரக்கவும், பால் கட்டி உண்டாகும் முலை வீக்கத்தை கரைக்கவும் வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்கடுக்காக வைத்துக் கட்டலாம்.

89) தண்ணீர் தெளிய: தேற்றான் விதையை தண்ணீரில் உரைத்து கரைத்தால் தண்ணீர் தெளிந்து நிற்கும்.

90) கண் நீர் கோர்த்தல் தணிய: மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண்சீலைத்துண்டை நனைத்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு கண்நோய் உள்ளவர்கள், இச்சீலையைக் கொண்டு கண்களை துடைத்துவர கண்சிவப்பு, கண்ணருகல், கண்வலி, கண்ணில் நீர்கோர்த்தில் இவை தணியும்.

91) புகையிலை நஞ்சுக்கு: வெங்காய கிழங்கு சாற்றை உட்கொள்ள புகையிலை நஞ்சு மாறும்.

92) குடிவெறியின் பற்று நீங்க: மிளகாய் செடியுடன் இலவங்கப்பட்டை, சருக்கரை சேர்த்து குடிநீரிட்டுக் கொடுக்க குடிவெறியின் பற்று நீங்கும்.

93) நீரிழிவு நீங்க: தொட்டாற்சுணுங்கி இலையையும், வேரையும் உலர்த்திப் பொடித்து பாலில் 4-8 கிராம் சேர்த்துக் கொடுக்க நீரிழிவு நீங்கும்.

94) பெரும்பாடு தணிய: அசோக பட்டையை இடித்துச் சாறுபிழிந்து கால் முதல் ஒரு உச்சிகரண்டியளவு கொடுத்துவர பெரும்பாடு தணியும்.

95) நரம்பு தளர்ச்சி நீங்க: அமுக்கராக் கிழங்குபொடி 1 பங்கும், கற்கண்டு 3 பங்கும் சேர்த்து, வேளைக்கு 4 கிராம் காலை மாலை உட்கொண்டு, அரை அல்லது ஓர் ஆழாக்குப் பசுவின் பால் சாப்பிட்டுவர, நரம்பு தளர்ச்சி நீங்கும்.

96) விக்கத்திற்கு ஒற்றடம்: நொச்சி இலையை வதக்கி ஒற்றடமிட விக்கம், கீல்வாயு தீரும்.

97) மூட்டுப் பூச்சிகள் அகல: ஆகாயத் தாமரை பூண்டை மூட்டுப் பூச்சிகள் நிரம்பிய இடங்களில் வைக்க, இது வாடுந்தறுவாயில் உண்டாகும் ஒருவித வெகுட்டல் மணத்தால் இப்பூச்சிகள் மயங்கி இறக்கும்.

98) நெஞ்சு சளி: தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆர வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

99) தலைவலி: ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

100) தொண்டை கரகரப்பு: சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

101) தொடர் விக்கல்: நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

102) வாய் நாற்றம்: சட்டியில் படிகாரம் போட்டு காய்ச்சி ஆறவைத்து அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும்.

103) உதட்டு வெடிப்பு: கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு குணமாகும்.

104) அஜீரணம்: ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.

105) குடல்புண்: மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.

106) வாயு தொல்லை: வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுதொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.

107) வயிற்று வலி: வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.

108) மலச்சிக்கல்: செம்பருத்தி இலைகளை தூள் செய்து, தினமும் இருவேளை சாப்பிட்டு வர மலச்சிக்கல் தீரும்.

109) சீதபேதி: மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிட சீதபேதி குணமாகும்.

110) பித்த வெடிப்பு: கண்டங்கத்திரி இலைசாறை ஆலிவ் எண்ணையில் காய்ச்சி பூசி வந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.

111) மூச்சுப்பிடிப்பு: சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு எடுத்து சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.

112) சரும நோய்: கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வர சரும நோய் குணமாகும்.

113) தேமல்: வெள்ளை பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வர தேமல் குணமாகும்.

114) மூலம்: கருணைக் கிழங்கை சிறுதுண்டுகளாய் நறுக்கி துவரம் பருப்புடன் சேர்த்து, சாம்பாராக செய்து சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.

115) தீப்புண்: வாழைத் தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வர தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

116) மூக்கடைப்பு: ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

117) வரட்டு இருமல்: எலுமிச்சம் பழசாறு, தேன் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாக

– U. **சரவணன்**

# ஐஐடி மெட்ராஸ்-ல்

# BS Degree in Data Science and Applications

## பட்டப்படிப்புக்கான ஜனவரி-2023 மாணவர் சேர்க்கைக்கு

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (ஐஐடி மெட்ராஸ்) பிஎஸ் டேட்டா சயின்ஸ் அண்ட் அப்ளிகேஷன்ஸ் (BS Degree in Data Science and Applications) பட்டப்படிப்பில் ஜனவரி-2023 பேட்ச்-ல் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பாடங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலம் வழங்கப்படுவதுடன், தேர்வுகள் நேரடியாக நடத்தப்படுவதால் உலகின் எப்பகுதியில் உள்ள மாணவர்களும் இப்பாடத் திட்டத்தில் விண்ணப்பித்து கல்வி கற்க முடியும்.

இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இப்பாடத் திட்டத்தில் சேர்ந்து படிக்க விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி - https://onlinedegree.iitm.ac.in. ஜனவரி-2023 பருவத்திற்கான டேட்டா சயின்ஸ் பாடத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க 16 ஜனவரி 2023 கடைசி நாளாகும்.

முதல் பேட்ச் மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடிக்கும் தறுவாயில் உள்ளதால், அவர்களைப் பணியமர்த்துதல் மற்றும் உள்ளகப் பயிற்சி வாய்ப்புகளுக்காக பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் ஐஐடி மெட்ராஸ் பிஎஸ் குழுவினர் மும்முரமாக கலந்தாலோசனை செய்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் மாணவர்களை சேர்க்க ஆர்வமாக உள்ள, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் 100-க்கும் மேற்பட்ட நிறுவனங்களை இந்தக் குழுவினர் அணுகிப் பேச்சு நடத்தி உள்ளனர்.

ஒரு டிப்ளமோவை முடித்துள்ள மாணவர்கள் ஃபோர்டு அனலிட்டிக்ஸ், கேபிஎம்ஜி, ஆதித்ய பிர்லா, ரெனால்ட் நிசான், வுநெட், பக்மேன், ஆசியா பசிபிக், ரிலையன்ஸ் ஜியோ உள்ளிட்ட நிறுவனங்களில் ஏற்கனவே உள்ளகப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டம் குறித்துப் பேசிய ஐஐடி மெட்ராஸ் இயக்குநர் பேராசிரியர் வி.காமகோடி கூறும்போது, நாடு முழுவதும் உள்ள மாணவர்களை உள்ளடக்கிய முறையில் வாய்ப்பு அளிக்கும் முதல்படியாக




தரவு அறிவியலில் (டேட்டா சயின்ஸ்) பி.எஸ். பட்டப்படிப்பு விளங்குகிறது.

ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் நேரடிப் பயிற்சி, மாணவர்களுக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்குதல், அதிநவீனத் தொழில்நுட்பம் மற்றும் தலைப்புகளில் மாணவர்களின் திறனை வெளிப்படுத்துதல், கடுமையான மதிப்பீட்டு முறைகள் போன்றவற்றால் வேலைவாய்ப்பு சார்ந்த திட்டமாக இதனை உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் 11.2 மில்லியன் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம், எனத் தெரிவித்தார்.

டிப்ளமோவில் 4,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள், பட்டப்படிப்பில் 60 பேரைக் கொண்ட முதல் பேட்ச் மாணவர்கள் உள்பட 16,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது இத்திட்டத்தில் படித்து வருகின்றனர். ஐஐடி மெட்ராஸ் நடத்திவரும் இந்தப் படிப்புக்காக மாணவர்கள் ஜேஇஇ தேர்வுக்கு விண்ணப்பிக்கவோ, தங்களைத் தயார் செய்து கொள்ளவோ அவசியமில்லை.

ஐஐடி மெட்ராஸ் பிஎஸ் டேட்டா சயின்ஸ் அண்ட் அப்ளிகேஷன்ஸ் பாடத்திட்ட பொறுப்பு பேராசிரியர் டாக்டர் ஆண்ட்ரூ தங்கராஜ் இதுபற்றி மேலும் கூறுகையில், மாணவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு பட்டப்படிப்புகளைப் படிக்கலாம் என

பல்கலைக் கழக மானியக் குழு (UGC) அண்மையில் ஒப்புதல் அளித்திருப்பதன் மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் பல்வேறு பட்டப் படிப்புகளைப் படித்து வரும் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு வாயில் கதவுகள் திறந்துவிடப் பட்டுள்ளன. இதனால் புரோகிராமிங், டேட்டா சயின்ஸ் ஆகிய படிப்புகளிலும் மாணவர்கள் நன்கு தயார் செய்து கொள்ள முடியும். ஜேஇஇ அல்லது கேட் (GATE) தேர்வுகளை எழுதி வழக்கமான முறையில் சேரும் வாய்ப்பைப் பெற இயலாதவர்கள், ஐஐடி-யில் பட்டம் பெறும் தங்கள் கனவை நனவாக்க இதுஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பாகும் என்றார்.

மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்து பணியிடத்தில் சேர்ந்த உடனேயே அவர்களின் உற்பத்தித் திறனை உறுதி செய்யும் வகையில், தொழில் துறையில் உள்ளவர்களிடம் பலகட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னரே இந்த பட்டப் படிப்புக்கான பாடத் திட்டம் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. சான்றிதழ், டிப்ளமோ, பட்டம் என பல்வேறு நிலைகளில் வெளியேறும் விதமாக இந்தப்படிப்பு அமைந்துள்ளது. எந்த அளவுக்கு நுணுக்கங்களை அறிந்து கொண்டு வெளியேறலாம் என்பதை மாணவர்களே தீர்மானித்துக் கொள்ள இதில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

ஐஐடி மெட்ராஸ் பிஎஸ் டேட்டா சயின்ஸ் அண்ட் அப்ளிகேஷன்ஸ் பாடத்திட்ட பொறுப்பு பேராசிரியர் டாக்டர் விக்னேஷ் முத்துவிஜயன் கூறும்போது, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னணியைக் கொண்ட மாணவர்கள் அவர்கள் எங்கிருந்தாலும் 50% முதல் 100% வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. 4,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வாறு உதவித் தொகையைப் பெற்று வருகின்றனர். மாணவர்கள் தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்ள செயல்முறைகள் இருப்பதால் பயிற்சி வகுப்புகளுக்காக செலவழிக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்த கல்விக் கட்டணத்துடன் கல்வி உதவித் தொகையும் கிடைப்பதால், ஐஐடி மெட்ராஸ்-ல் படிக்கும் உந்துதலும், கடினமாக உழைக்கவும் ஆர்வமுள்ள எவரும் இப்பாடத்திட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம், எனக் குறிப்பிட்டார்.

பத்தாம் வகுப்பில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படித்து முடித்தவர்கள் இதில் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள். பன்னிரண்டாம் வகுப்பில் படித்துவரும் மாணவர்கள் தகுதித் தேர்வு எழுதி பள்ளியில் படிக்கும்போதே ஐஐடிஎம்-ல் மாணவர் சேர்க்கைக்கான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த மாணவர் சேர்க்கை நடைமுறை இந்தியாவிலேயே தனித்துவமான ஒன்றாகும். எந்த வயதை உடையவர்களும், எந்தப் பின்னணி அல்லது பிரிவைச் சேர்ந்தவர்களும் இப்படிப்பிற்கு விண்ணப்பித்து பாடங்களைக் கற்கலாம். கலை, அறிவியல், வணிகவியல், பொருளாதாரம், மருத்துவம், சட்டம், பொறியியல் போன்ற பாடப்பிரிவுகளுடன் தொடர்புடைய 18 முதல் 75 வரை வயதுடையோர் தற்போது மாணவர்களாக இருந்து வருகின்றனர்.

ஐஐடி மெட்ராஸ் நடத்தும் நான்கு அடிப்படையான பாடங்களை நான்கு வாரங்கள் கற்றுக் கொண்டு மாணவர்கள் தேர்வு எழுதி தகுதிபெறும் விதமாக இப்பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. குறைந்தபட்சம் 50-க்கும் மேற்பட்ட மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெறுவோர் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இடங்களின் எண்ணிக்கை இவ்வளவுதான் என வரையறை ஏதும் இல்லாததால், தகுதிபெறும் அனைத்து மாணவர்களும் இப்படிப்பில் கல்வி கற்கமுடியும்.

பாடத்திட்டத்தின் தொடக்கமாக புரோகிராமிங் அண்ட் டேட்டா சயின்ஸ்பாடங்களில் அடிப்படை அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து பவுண்டேஷன் நிலையில் கற்பிக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து டிப்ளமோ நிலையில் பாடங்கள் நடத்தப்படும். டிப்ளமோ இன் புரோகிராமிங் படிப்பில், டேட்டா ஸ்ட்ரக்சர்ஸ் அண்ட் அல்காரிதம்ஸ், ஜாவா புரோகிராமிங்,

வெப் அப்ளிகேஷன் டெவலப்மெண்ட் (Front and Back end), டேட்டாபேஸ் மேனேஜ்மெண்ட், லினக்ஸ் புரோகிராமிங் குறித்த அறிமுகம் மற்றும் இரு முழுஅளவிலான மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை இடம்பெறும்.

டேட்டா சயின்ஸ் பாடத்தில் டிப்ளமோ வகுப்பில் மாணவர்களுக்கு இயந்திரக் கற்றல் (Machine learning) குறித்த அடிப்படைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

தரவு சேகரிப்பு, நிறுவனம், தரவு சுத்திகரிப்பு, பகுப்பாய்வு, அனுமானித்தல் போன்ற வணிக ரீதியான அம்சங்கள் மாணவர்களுக்கு விளக்கப்படுகின்றன.

இவற்றுடன் மாணவர்கள் இப் பாடங்களை எந்த அளவுக்கு கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள உதவும் வகையில் வணிகத் தரப்பு (business side), இயந்திரக் கற்றலை செயல்படுத்துதல் (ML implementation) ஆகிய இரு செயல்திட்டங்கள் (projects) அமைந்துள்ளன.

– P.கார்த்திகேயன்

# 'காசி தமிழ்ச் சங்கமம் விரைவு ரயில்' என்ற புதிய ரயில் சேவை தொடங்கப்படும்:

## ரயில்வே அமைச்சர் அறிவிப்பு



காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில் காசி மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையே 'காசி தமிழ்ச் சங்கமம் எக்ஸ்பிரஸ்' என்ற புதிய ரயில் சேவை தொடங்கப்படும் என்று மத்திய ரயில்வே, தொலைத் தொடர்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார். காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழகப் பிரதிநிதிகள் குழுவினருடன் அவர் கலந்துரையாடினார். வாரணாசி சந்திப்பு ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டும் மறுசீரமைப்புத் திட்டப் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

திரு அஸ்வினி வைஷ்ணவ் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்ற எட்டாவது தமிழக குழுவின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். இந்தப் பயணத்தின்போது தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை அந்தக் குழுவினர் அமைச்சரிடம் பகிர்ந்து கொண்டனர். அத்துடன் அவர்களுக்கு கிடைத்த உபசரிப்புக் குறித்தும் அவர்கள் விளக்கி நன்றி தெரிவித்தனர். இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த உதவிய ரயில்வே அமைச்சகம் மற்றும் ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழக (ஐஆர்சிடிசி) குழுவினரின் முயற்சிகளை அமைச்சர் பாராட்டினார். இதுபோன்ற மக்களிடையேயான பரிமாற்ற நிகழ்ச்சிகள் நமது மரபுகள், அறிவு மற்றும் கலாச்சாரத்தில் பிணைப்பை ஏற்படுத்தி நெருக்கத்தை அதிகரிக்கும் என்று அவர் கூறினார். அதே நேரத்தில் பாரம்பரியத்தைப் பற்றிய புரிதலை உருவாக்கி, இந்த இரு பகுதி மக்களிடையே உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்வை நினைவு கூரும் விதமாக காசி மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையே 'காசி தமிழ் சங்கமம் எக்ஸ்பிரஸ்' என்ற புதிய ரயில் சேவை தொடங்கப்படும் என்றும், விரைவில் இந்த ரயில் சேவை தொடங்கும் என்றும் அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்தார்.

வாரணாசி சந்திப்பு ரயில் நிலையத்தின் மறு சீரமைப்புத் திட்டங்களையும் மத்திய ரயில்வே அமைச்சர் ஆய்வு செய்தார். வருங்காலத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு ரயில் நிலையத்தின் மறுசீரமைப்பைத் திட்டமிடுமாறு அவர் அறிவுறுத்தினார்.

வாரணாசி ரயில் நிலையத்தை ஆய்வு செய்த அமைச்சர், இந்த ரயில் நிலையத்தை விமான நிலைய



முனையமாக மாற்றும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, உலகத் தரம் வாய்ந்த ரயில் நிலையமாக இது மறுசீரமைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார். இந்த ரயில் நிலையத்தை உலகிலேயே சிறந்த ரயில் நிலையங்களில் ஒன்றாக மாற்றும் வகையில் சுமார் 7000 கோடி ரூபாய் செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கை அடுத்த 50 ஆண்டுகளைக் கணக்கில் கொண்டு முன்கூட்டியே திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார். வாரணாசி நகரப் பகுதியில் உள்ள ரயில் நிலையங்களுக்கு பயணிகள் அதிக அளவில் வந்து செல்வதை எளிதாக்கும் வகையில், இப்பகுதியில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். பயணிகளுக்கு நவீன வசதிகளை வழங்கும் வகையில் தூங்கும் வசதியுடன் கூடிய (ஸ்லீப்பர்) வந்தே பாரத் ரயில் தயாரிப்பு விரைவில் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.


நாட்டின் 75-வது ஆண்டு விடுதலைப் பெருவிழாவின் ஒரு பகுதியாக கல்வி அமைச்சகத்தால் ஒரு மாத கால நிகழ்ச்சியான காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காசியில் நடைபெறும் இந்தத் விழாவைக் காண பல்வேறு தரப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். ரயில்வே அமைச்சகமும் இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழகமும் (ஐஆர்சிடிசி) நிகழ்ச்சிக்கு வருவோரை காசி, பிரயாக்ராஜ் மற்றும் அயோத்திக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு விருந்தோம்பல் பணிகளை சிறப்பாகச் செய்து வருகின்றன. (PIB)

– தங்கராஜ்

## இந்தியாவின் வளமான இசை பாரம்பரியத்தை பாதுகாக்கவும், கொண்டாடவும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு பிரதமர் பாராட்டு

இந்தியாவின் வளமான இசை பாரம்பரியத்தை பாதுகாக்கவும், கொண்டாடவும் மற்கொள்ளப் பட்டு வரும் முயற்சிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். நமது இளைஞர்களுக்கும், கலாச்சாரத்திற்கும் இடையேயான இணைப்பை இது ஆழப்படுத்தும் என்று திரு மோடி கூறியுள்ளார்.

கலா ராம்நாத்தின் ட்விட்டர் பதிவிற்கு பதில் அளித்து பிரதமர் கூறியிருப்பதாவது:




"இந்தியாவின் வளமான இசை பாரம்பரியத்தை பாதுகாக்கவும், கொண்டாடவும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் அபாரமானவை என்பதுடன், அதீத ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பை உணர்த்துகின்றன. நம் இளைஞர்களுக்கும், நம் கலாச்சாரத்திற்கும் இடையேயான இணைப்பை இது ஆழப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்." என்று கூறினார். (PIB)

– பிரகாஷ்

# குழந்தைகளுக்கான POCSO e-box

**இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்**

குழந்தைகளுக்கு எதிரான பாலினக் குற்றங்கள் இந்தியாவில் பெருகி இருக்கின்றன. இவற்றில் ஒரு சிறு பகுதி மட்டுமே வெளிச்சத்திற்கு வருகிறது. கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளில் 53% குழந்தைகள் ஏதோ ஒரு வகையிலான பாலினச் சீண்டலுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்று ஒரு தகவல் தெரிவிக்கிறது. பல நேர்வுகளில், இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோர் குடும்ப உறுப்பினர்களாகவோ, நெருங்கிய உறவினர்களாகவோ, அறிமுகமான ஒரு நபராகவோதான் இருக்கின்றனர். பாதிக்கப்படும் குழந்தைகள் பொதுவாக இதைப்பற்றி வெளியில் சொல்வதில்லை. அத்தகைய குழந்தைகளின் மனதில் வாழ்நாள் முழுவதும் மாறாத வடுவாக இந்த பாதிப்பு அமைந்துவிடும். பாலினத் துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு புலனுணர்வுக் குறைபாடு, வன்செயல், மனப்பதற்றம், மனச்சோர்வு உட்பட பலவிதமான இடர்தரும் நடத்தைகள் உருவாகிவிடும் ஆபத்து இருக்கிறது.

வெட்க உணர்வு, குற்ற உணர்வுகளுக்கு ஆட்படுவதும், பிறருடன் கலகலப்பாக பழகுவதைத் தவிர்ப்பதும், சுயமதிப்புக் குறைவும் இதர பிற விளைவுகளாகும்.

**Pocso e-box**

பாலினக் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) மின்னணுப் பெட்டி, பாலினரீதியாக துன்பத்திற்கு ஆளாக்கப்படும் குழந்தைகள் பற்றி ஆன்லைனில் தகவல் தெரிவிப்பதற்கான ஏற்பாடாகும். குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் (NCPCR) முன் முயற்சியினால் செய்யப்பட்டிருக்கும் இந்த ஏற்பாடு, பாதிக்கப்பட்ட குழந்தைகளே நேரடியாக ஆணையத்திற்குத் தகவல் தெரிவிப்பதற்கு உதவக் கூடியது. எளிதில் புகார் அளிப்பதற்கும், தவறு செய்பவர்கள் மீது Pocso சட்டம் 2012இன் கீழ் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிசெய்கிறது. மின்னணுப் பெட்டி இயக்குவதற்கு எளிதானது. புகாரும் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

**இது எப்படி வேலை செய்கிறது?**

குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் இணையதள முகப்புப் பக்கத்தில் Pocso ebox உடன் தொடர்பு கொள்வதற்கான இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. Pocso ebox என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் க்ளிக் செய்ய வேண்டும்.

முதல்படி: Pocso e-box பொத்தனை க்ளிக் செய்ததும் திரையில் ஒரு உயிர்ப்பூட்டப்பட்ட படம் தோன்றும். உங்களுக்கு என்ன நேர்த்திருந்தாலும் அது




உங்களுடைய தவறினால் ஏற்பட்டதல்ல. எனவே, அதற்காக குற்ற உணர்ச்சி கொள்ள வேண்டாம். NCPCR உங்களுக்கு உதவும் நண்பன் என்ற நம்பிக்கையை அந்தப்படம் தரும்.

இரண்டாம்படி: திரையில் ஒரு அம்புக்குறி தெரியும். அந்த இடத்தில் க்ளிக் செய்யும் போது, அடுத்து ஒரு பக்கத்திற்கு அது அழைத்துச் செல்லும். பாலினச் சீண்டல்களின் வகைகளைத் தெரிவிக்கும் படங்கள் இந்தப் பக்கத்தில் காணப்படும். இதில் ஒரு படத்தை தேர்வு செய்யவேண்டும்.

மூன்றாவது படி: கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, நேர்ந்திருக்கும் தொல்லை இவைபோன்ற தகவல்களை தெரிவித்து இங்கு தெரியும் ஒரு படிவத்தை நிறைவு செய்யவேண்டும். பிறகு படிவத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள submit பொத்தானைச் அழுத்த வேண்டும். இப்போது, இந்தக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு தனித்த அடையாள எண் ஒன்று திரையில் தோன்றும்.

**Pocso சட்டம் பற்றி**


குழந்தைகளின் மீது ஏவப்படும் பாலியல் கொடுமைகள் குறித்து கவலை கொண்டுள்ள அரசாங்கம் Pocso சட்டத்தை இயற்றியது. பாலியல் சீண்டல், பாலியல் தாக்குதல், ஆபாசப் படங்களைக் காட்டுதல் போன்ற குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில் குழந்தைகளுக்குத் தோழமையான அம்சங்கள் சட்ட வழிமுறைகளின் ஒவ்வொரு நிலையிலும் சேர்க்கப்பட்டுள்ளன. குற்றம்பற்றி தெரிவித்தல், ஆதாரங்களைப் பதிவு செய்தல், புலன் விசாரணை, சிறப்பு நீதிமன்றங்களின் மூலம் விரைவான வழக்கு விசாரணை ஆகியவற்றிற்கு எளிய முறையில் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 18 வயதுவரை உள்ள் எவரும் குழந்தை என்றே இந்த சட்டத்தின்படி கருதப்படுகின்றனர்.

ஆதாரம்: குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம்.
(https://ncpcr.gov.in/pocso/public/)

– K. சுப்புலட்சுமி

# மரம் நமக்கு என்ன தருகிறது?

உயிருள்ள ஒரு மரத்தின் மதிப்பு ரூ.10 இலட்சம்! மரம் நமக்கு என்ன தருகிறது?



* மலர்கள், காய், கனிகள் தருகிறது

* நிழல், குளிர்ச்சி, மழை தருகிறது

* காற்றை சுத்தப்படுத்துகிறது

* நாம் வெளியிடும் கார்பன் டைஆக்சைடை கிரகித்துக் கொண்டு, நமக்குத் தேவையான ஆக்சிஜனை வெளியிடுகிறது.

* கார்பன் டைஆக்சைடை கிரகித்துக் கொள்வதால் புவி வெப்பமடையும் விளைவை குறைக்கிறது.

* மண்ணில் வேரோடி இருப்பதால், மண் அரிப்பைத் தடுக்கிறது. நிலச்சரிவுகளை தடுக்கிறது.

* மரத்தைச் சுற்றி நீர் சேகரமாகவதால், நிலத்தடி நீர் அதிகரிக்கிறது.

* காய்ந்த சருகு இலைகள் மண்ணுக்கு உரமாகின்றன.

* ஒரு ஐம்பது ஆண்டு வளர்ந்த மரம் பல லட்சம் ரூபாய் சொத்துக்குச் சமமான நன்மைகளைத் தருகிறது.

* ரூ. 5.30 லட்சம் மதிப்புள்ள ஆக்சிஜனை வெளியிடுகிறது.

* ஒரு மரம் தன் வாழ்நாளில் கிரகித்துக் கொள்ளும் கார்பன் டைஆக்சைடின் அளவு 1000 கிலோ.

* ரூ. 6.40 லட்சம் மதிப்புள்ள மண் அரிப்பைத் தடுக்கிறது.

* ரூ. 10.00 லட்சம் மதிப்புள்ள உணவைத் தருகிறது.

* ரூ. 10.30 லட்சம் மதிப்புள்ள காற்று மாசுபாட்டைத் தடுக்கிறது.

* மரங்களை மனிதர்கள் பல்வேறு வகைகளில் பயன்படுத்தி வருகிறார்கள். அவற்றை அறிந்து கொள்ள நம்மைச் சுற்றிப் பார்த்தால் போதும். அதன் பயன்களின் பட்டியலை இந்த ஒரு பக்கத்துக்குள் அடக்க முடியாது.

* மரங்கள் உணவைத் தருகின்றன. காய், கனி, கீரை வகைகள் போன்றவை மனிதனுக்கும், விலங்குகளுக்கும் கிடைக்கும் இயற்கைக் கொடை. மரங்கள் மட்டுமே உலகில் சுயமான உணவைத் தயாரிக்கும் திறனைப் பெற்றுள்ளன.

* நச்சு வாயுவை உட்கொள்வதும், பிராண வாயுவை வெளிவிடுவதும் மரங்கள் செய்யும் அற்புதங்களில் ஒன்று. வேலை நேரம் தவிர நாம் பெரும்பாலான நேரம் வீட்டில்தான் கழிக்கிறோம். வீட்டிலும் வீட்டைச் சுற்றிலும் மரங்கள், செடிகொடிகளை வளர்த்தால் காற்று தூய்மையாகும்.

* மரங்கள் இளைப்பாற நிழல் தருகின்றன. நகர்ப்புறங்களிலும், வசிப்பிடங்களிலும் வெப்பத்தை கட்டுப்படுத்தி இயற்கையான குளிர்சாதன வசதியைத் தருகின்றன.

* மரங்கள் மழையைத் தருகின்றன. வானில் மழைமேகம் உருவாகும்போது மரங்கள் அதிகம் உள்ள பகுதியில் வீசும் குளிர்ந்த காற்றால் குளிர்விக்கப்படுகிறது. இதனால் அப்பகுதியில் மேகங்கள் மழையைப் பொழிகின்றன.

* மரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. வெட்ட வெளியில் மழை பெய்யும்போது மண் அரிக்கப்பட்டு ஆறு, குளம் போன்ற தாழ்ந்த பகுதிகளில் சேரும்.

* இதனால் ஒருபுறம் வளமான மேல்மண் இழக்கப்படுவதும், மறுபுறம் ஆறுகள், குளங்கள் மேடாவதும் நடக்கிறது.

* மரம் உள்ள பகுதியில் மழை பெய்வதால், உடனடியாக மண் கரைந்து ஓடாமலும், வேர்கள் பிடித்திருப்பதால் அடிமண் அடித்துச் செல்லப்படாமலும் மண்ணரிப்பு தடுக்கப்படுகிறது.

* கோடையில் அனல் காற்று வீசும்போது நிலம் வறண்டு போகிறது. காற்றில் மேல்மண் அடித்துச் செல்லப்படுகிறது. இதை மரங்கள் தடுத்து நிறுத்துகின்றன. இதன் மூலம் நிலம் பாலைவனமாகாமல் தடுக்கப்படுகிறது.

* புயலின் வேகத்தை மரங்கள் கட்டுப்படுத்துகின்றன. கடலோரங்களில் காணப்படும் அலையாத்தி காடுகள் வேர்களில் மண்ணைச் சேகரித்து வைப்பதால் அலையின் வேகம் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால்தான் அலையாத்தி காடுகள் என்ற பெயரும் வந்தது. பலமான வேர்களைக் கொண்டிருப்பதால் புயலின் வேகம் மட்டுப்படுத்தப்படுகிறது.

* உயிரோடு இருக்கும்போது மட்டுமின்றி, இறந்த பின்பும் மரங்கள் நன்மையே தருகின்றன. ஏழை மக்களின் வீடுகளில் விறகாக-எரிபொருளாகப் பயன்படுகிறது.

* மரமும், பலகைகளும் கதவு, ஜன்னல், வீடு கட்ட பயன்படுகின்றன. கட்டுமானப் பொருட்களில் இருந்து வீட்டுத் தேவைகள், அலங்காரப் பொருட்கள் வரை எண்ணற்ற பொருட்கள் மரங்களைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

- K. மணிமித்ரன்

# சுவை எனும் நஞ்சு

“உங்கள் ஆரோக்கியம் உங்கள் நாவு தேடும் சுவையால் கெடும்". எங்கு நோக்கிலும் உணவு, உணவு, உணவு. தமிழகத்தில் உணவு பெரும் வணிகம் ஆகிவிட்டது. எல்லோரும் எதையாவது தின்று கொண்டே இருக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதில் எதுவுமே வழக்கமான உணவு வகை கிடையாது.

உதாரணமாகச் சோறு, இட்லி, தோசை, பொங்கல், உப்புமா போன்றவை ஏளன உணவு பொருளாகப் பார்க்கப்படுகிறது. பல உணவகங்களில் இவை இல்லை. ரொட்டி வகைகளும், கறி வகைகளும் மட்டுமே இரவு உணவில் பெரிதும் பரிமாறப்படுகிறது. மதிய வேலைகள் கூடச் சோற்றை விடப் பிரியாணி வகைகள், பரோட்டா வகைகள் அதிகம் காணப்படுகிறது. இந்த வரிசையில் காலை உணவு மட்டும் பெரிதும் பாதிக்கப்படவில்லையென நம்புகிறேன். விரைவில் அதனையும் ஓட்ஸ், பர்கர், சாண்ட்விச், நூடுல்ஸ், பாஸ்தா போன்ற உணவு வகைகளால் நிரப்பப்படலாம். தொடர் தொலைக்காட்சி விளம்பரங்கள் அதனைத் தான் புகுத்திக் கொண்டிருக்கிறது.



ஒரே ஒரு வகை உணவு பரிமாறப்பட்ட என் சொந்தங்கள் வீட்டில் அனைத்திலும் இரண்டு மூன்று வகை சேர்த்து பரிமாறப்படுகிறது. இந்த மாற்றத்திற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இவையெல்லாம் கடந்த ஐந்து வருடங்களில் நடந்தேறியிருக்கிறது. அதனை அவர்கள் உணரவே இல்லை. யூடியூப் போன்ற வலையொலிகளின் உணவு நிகழ்ச்சிகள் இதற்குக் காரணம் என்று சொல்லலாம். ஒரு கடையில் 99 வகை பரோட்டாக்கள் கிடைக்குமென்ற பலகையைப் பார்த்து இதுவரை குழம்பிக் கொண்டே இருக்கிறேன்.

ஐஸ்கிரீமை கூடப் பொரித்து தின்கிறார்கள். சிஸ்லர் என்னும் நெருப்பு கல்லில் ஐஸ்கிரீம் பரிமாறப்படுகிறது. ஏன். உலகில் உள்ள அனைத்து வகை உணவுகளும் தமிழகத்தில் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் கிடைக்கிறது. பிசா(சு), சவ(ம்)ர்மா போன்ற கடைகள் எல்லா ஊரிலும் தென்படுகிறது. திக்கு எங்கிலும் பேக்கரி, அதிலும் விற்கப்படும் பொருட்கள் அங்குச் செய்வதில்லை, யாரோ ஒருவர் செய்து அனைத்திற்கும் வழங்குகிறார்.

சுவை என்பது கூடப் பழைய சுவை இல்லை, அதிகப்படியாக டால்டா கலப்பு போன்றவை இருக்கிறது. நாக்கில் வைத்தவுடன் கரைய வேண்டும். ஊரில் எவனுக்கும் பல் இல்லை கடிக்கவேண்டிய அவசியமில்லை என்கிறது அடுமனை. கடினமாகக் கடிக்கும் பொருள்கள் விற்பனையில் இல்லை. இனிப்பு வகைகள் கேக்கு வகைகள் பெருகிவிட்டது. இனிப்பு பெருகிவிட்டு நிலத்தில் பல் மருத்துவமனையும் பெருகி இருக்கிறது. அண்ணாச்சி கடைகளிலும் பாய் கடைகளிலும் தமிழ் பொருள்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் வட இந்திய பொருள்கள்தான் விற்பனைக்கு இருக்கிறது. ஏன் தின்பண்டங்கள் கூடக் கல்திராம்ஸ் பாக்கெட்டுகள் தான் இருக்கிறது. ஒரு காலத்தில் தூ என்று துப்பிய சுவை. இன்று விமான நிலையம் முதல் பொட்டிக்கடை வரை மக்களுக்கு வழக்கப்படுத்தி விட்டனர்.

இதற்கு அடிப்படைக் காரணம் பெருகிவரும் D-MART போன்ற கடைகள் தான். அவர்கள் பெருமளவில் கொள்முதல் செய்தால் மட்டுமே குறைந்த விலைக்குக் கொடுக்க முடியும். ஆகையால் அவர்கள் பெரும் வணிக நிறுவனங்களின் பொருட்களைத் தான் விற்கிறார்கள். அதன் நாகரீக தோற்றத்தைப் பார்த்து. அங்குச் சென்றால் அனைத்தும் கிடைக்கும் என்று மக்கள் செல்லத் தொடங்குகிறார்கள். அந்த மக்களைத் தங்கள் கடைக்கு அழைக்க அண்ணாச்சிகளும் அதே பொருளை விற்பனை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இதனால். தமிழ் பொருட்களை உற்பத்தி செய்த

பல குடும்பங்கள் அழிந்து இருக்கும். எங்கள் ஊரில் கூட மெட்ரோ என்ற பெரும் கடை மற்ற அனைத்தையும் உண்டு வளர்கிறது. 100 ரூபாய் டிக்கெட்டை வாங்கி நான்கு மணி நேரம் செல்லும் ரயில் பயணத்தில் பத்துக்கு மேற்பட்ட உணவுப் பொருட்கள் விற்கப்படுகிறது. மக்கள் அதற்கு நூறு ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறார்கள். உணவிற்காகச் செய்யும் செலவு வீண் செலவாக யாரும் கருதுவதில்லை. அதுதான் இந்த வணிகத்தின் அடிப்படை மூலதனம்.

உணவை மக்கள் முதலில் விழி வழி உண்கிறார்கள், கண்களால் தின்கிறார்கள். பிறகு கண்டதையெல்லாம் வாங்கி பிடித்ததை தின்றுவிட்டு பிடிக்காததை தூக்கி எறிகிறார்கள். முன்பெல்லாம் வெளியே செல்லும் நேரத்தில் வீட்டுக்கு வந்து சமைக்க நேரம் இல்லாத காரணத்தினால் வெளியே உணவருந்தும் பழக்கம் இருந்தது. ஆனால் இப்போது எந்த நேரத்திலும் அதனை ஆர்டர் செய்தால் வீட்டுக்கே வந்து விடுமென்று பட்டி தொட்டிகளில் எல்லாம் swiggy, zomoto தூதுணவு வந்துவிட்டது. இங்குப் பசி பேசப்படுவதில்லை, ருசி மட்டுமே பேசப்படுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதியின் உணவும் அந்தந்த நில சூழலுக்கு ஏற்ற மாதிரி உருவாக்கப்பட்டது.

ஆனால் அவை அனைத்தையும் அனைத்து இடங்களுக்கும் கொண்டு சேர்ப்பது. மனிதர்களின் மரபணுவைச் சிதைக்கும் பெரும் போர். அறுசுவை உணவு கூட அடுத்த நாள் மலம் ஆகிவிடும் என்று கமலஹாசன் ஒரு பேட்டியில் கூறியது எனக்கு ஏனோ இப்போது நினைவுக்கு வருகிறது. தமிழர்கள் காலம் கடந்துதான் தமிழ் மொழியில் கலந்திருக்கும் பிற மொழி சொற்களை அகற்ற போராடினார்கள், அது இன்றளவும் வெற்றி பெறவில்லை என்பதனை ஊரெங்கும் இருக்கும் எழுத்து பலகையும், மக்கள் பேச்சும் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்மொழி அழிகிறது என்பதுதான் உண்மை. அதேபோல் அந்நிய உணவால் தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். சுவை எனும் நஞ்சிலிருந்து வெளியேறிப் பசி எனும் இயல்புக்கு மருந்திடும் தமிழர் உணவு வகைகளுக்குத் திரும்ப வேண்டும். அந்நிய உணவுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். இது நடக்காவிட்டால். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். அடுத்த பத்து வருடங்களில் ஊரெங்கும் புற்றுநோய் மருத்துவமனை பெருகிவிடும்.

இளம் வயதில் மரணம், எடை பருமனான குழந்தைகள், மாரடைப்பு என அனைத்தும் தலைவிரித்தாடும்.

– நா வீ சிவசங்கர்





# மௌன விரதம் இருப்பது ஏன்?

உண்ணாவிரதமும் மவுன விரதமும் ஆன்மிக முன்னேற்றத்திற்காக அனுசரிக்கப்படும் இரு முக்கியமான விரதங்கள். சஷ்டி, ஏகாதசி போன்ற தினங்களில் உண்ணாவிரதம் இருப்பவர்கள் பலர் உண்டு. ஆனால் மவுன விரதம் இருப்பவர்கள் குறைவு. உண்ணாவிரதமே கடினமானதுதான். ஆனால் மவுன விரதம் என்பது அதையும் விடக் கடினமானது. உண்ணாவிரதம் உடலைப் பட்டினி போட்டு உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது. மவுன விரதம் மனதைப் பட்டினி போட்டு அதன் ஆற்றலை மேம்படுத்துவது. மனதின் தீய எண்ணங்கள் மவுன விரதம் இருப்பதால் பெரிதும் குறையும்.

* தென்திசைக் கடவுள் எனப் போற்றப்படும் தட்சிணாமூர்த்தி சிவ பெருமானின் ஒரு வடிவம் ஆவார். அவர் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு மவுனத் தாலேயே உபதேசம் நிகழ்த்துகிறார். பல கோயில்களில் இடம் பெற்றிருக்கும் தட்சிணாமூர்த்திக் கடவுள் சிலை, மவுனத்தின் சிறப்பை மவுனமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

* ரமண மகரிஷி பல நேரங்களில் மவுனமாகவே இருப்பார். அவரைத் தேடிவரும் அடியவர்கள் தங்களின் ஆன்மிக சந்தேகங்களை மனத்தில் நினைத்துக் கொண்டு அவரின் எதிரில் அமர்ந்து தியானம் செய்வார்கள். அப்போது மவுனத்தின் மூலமாகவே அவர்களுக்கு அவர் பதிலளித்துவிடுவார். பல வெளிதேசத்து அடியவர்கள் அவ்விதம் ஸ்ரீரமணர் சன்னிதியில் அமர்ந்து ஆன்மிக ஐயப்பாடுகளுக்குத் தெளிவு பெற்றிருக்கிறார்கள். ரமண மகரிஷியின் மவுனம் எத்தனை சிறப்பானது என்பது பற்றி அவரைச் சந்தித்து ஆன்மிக விளக்கங்கள் பெற்ற வெளி தேசத்தவரான பால்பிரண்டன் தான் எழுதிய நூலில் விவரித்திருக்கிறார்.

* ஸ்ரீஅரவிந்தர் ஒருநாள் இரண்டு நாள் அல்ல, பல மாதங்கள் மவுனமாய் இருந்ததுண்டு. தியானத்திலேயே ஆழ்ந்து அவர் மவுனமாய் இருக்கும்போது அடியவர்கள் தங்களின் ஆன்மிக சந்தேகங்களை அவருக்குக் காகிதத்தில் எழுதி அனுப்புவார்கள். ஸ்ரீஅரவிந்தர் தம் விளக்கங்களை எழுத்து மூலம் எழுதி அனுப்புவார்.

இந்து சமயம், பவுத்த சமயம், சமண சமயம் உள்ளிட்ட பல சமயங்கள் மவுன விரதத்தின் அவசியத்தையும் பெருமைகளையும் பற்றிப் பேசுகின்றன.

முருக பக்தர்கள் கந்த சஷ்டி காலத்தில் மவுன விரதம் இருப்பதுண்டு. ஒருவார காலம் மவுன விரதம் அனுசரித்து கந்த சஷ்டியன்று அவர்கள் மவுன விரதத்தைத் துறப்பார்கள்.

பதஞ்சலி முனிவர் எழுதிய யோக சூத்திரம் என்ற நூலில் மவுனத் தவம் இருப்பதால் பல்வேறு சித்திகளை அடைய முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. 'மவுனம் சர்வார்த்த சாதகம்' என்பார்கள். அதாவது எல்லாவற்றையும் நமக்கு சாதகமாக ஆக்கித்தரும்

ஆற்றல் நாம் கடைப்பிடிக்கும் மவுனத்திற்கு உண்டு.

'மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி' என்றும் சொல்வதுண்டு. நாம் ஒரு கேள்வி கேட்டு அதற்கு ஒருவர் வாய்திறந்து எதுவும் பதிலாகத் தெரிவிக்காமல் மவுனமாய் இருப்பார் என்றால், அது நம் கேள்விக்கான உடன்பாட்டுப் பதிலை அவர் சொல்கிறார் என்பதற்கான அடையாளம்.

மவுன விரதம் இருப்பதன் முக்கியமான பயன்களில் ஒன்று பொய் பேசுவதை நாம் தவிர்த்துவிட முடியும் என்பது. பாவங்களில் மிகப் பெரிய பாவம் பொய்.

இன்றைய காலகட்டத்தில் பொய் பேசுவதைத் தவிர்க்க இயலாது என்ற சமாதானத்துடன் பலரும் சின்னதாகவும் பெரிதாகவும் பொய் களைப் பேசுவதை வழக்கமாய்க் கொண்டு விட்டார்கள். அதுபற்றிய குற்ற உணர்வு கூடக் குறைந்து விட்டது.

மவுன விரதம் இருந்தால் அந்த நேரத்தில் நாம் பொய் பேசமாட்டோம் என்பது மட்டுமல்ல, மெல்ல மெல்ல உண்மையை மட்டுமே பேசத் தொடங்குவோம்.

கோள் சொல்வது, புறம்பேசுவது, தேவையற்ற வெட்டி அரட்டைகளில் ஈடுபட்டுக் காலத்தைக் கொல்வது போன்றவையெல்லாம் கூட மவுன விரதம் அனுசரிப்பதால் நீங்கும். அவை நீங்குவதால் மனதின் ஆற்றல் மேலோங்கும்.


இதுவரை நாம் அனுபவித்தவை எல்லாம் புலன் இன்பங்கள் மட்டுமே என்பதையும் அமைதியான மனமும் எதிர்பார்ப்புகள் அற்ற வாழ்வுமே நிம்மதியைத் தரும் என்பதையும் மவுன விரதம் நமக்குப் புலப்படுத்தும். நாம் வாழ்வில் மேற்கொண்ட லட்சியங்களில் இருந்து விலகி வேறு திசைகளில் பயணம் மேற்கொள்வதை மவுன விரதம் நமக்குச் சுட்டிக் காட்டும். நம் வாழ்வைச் சரியான திசையில் செலுத்த மவுன விரதமே கைகொடுக்கும்.

இன்பத்தில் துள்ளாமலும் துன்பத்தில் துவளாமலும் இருக்கும் மனநிலையை மவுன விரதம் நம்மிடம் ஏற்படுத்தும். மனம் வலிமை பெறுவதால் நாம் நினைத்த செயல்கள் அனைத்திலும் நமக்கு வெற்றி கிட்டுவதை நாமே உணர முடியும்.

மவுன விரதம் நம் மனதைப் பற்றி நாம் ஆராயவும் நம் எண் ணங்களை நாம் கண்காணிக்கவும் பெரிதும் உதவுகிறது. மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று வள்ளுவர் சொல்லும் உயர் நிலையை எட்ட மவுன விரதம் பெரிதும் உதவுகிறது. நாள்தோறும் ஓரிடத்தில் அமர்ந்து சிறிது நேரமாவது எதுவும் பேசாமல் மவுன விரதம் பழகுவது உள்ளத்திற்கு மிகவும் நல்லது. அலைபாயும் மனத்தை அடக்குவதற்கு மவுன விரதம் ஒரு கருவியாகப் பயன்படும்.

– A.ஐயப்பன்

# குடிநீரின் மாசுபாடு



தண்ணீர் என்பது மாநிலப் பட்டியலில் இருப்பதால் குடிநீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாகத் திட்டமிடுதல், ஒப்புதல் அளித்தல், அமல்படுத்துதல் ஆகியவை மாநில/யூனியன் பிரதேச அரசுகளின் அதிகார வரம்புக்குள் உள்ளன. அனால், 2024க்குள் நாடு முழுவதும் ஊரகக் குடும்பங்கள் அனைத்திற்கும் போதிய அளவுக்கு, தரமானக் குடிநீர் வழங்கும் குழாய் இணைப்புக்காக முந்தைய தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் மாநில அரசுகளுடன் இணைந்து ஜல் ஜீவன் இயக்கம் என மத்திய அரசால் 2019 ஆகஸ்டிலிருந்து அமலாக்கப்படுகிறது.

மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் அறிக்கையின்படி, நாட்டில் உள்ள 16.97 லட்சம் கிராமப்புற குடியிருப்புகளில், குடிநீரில் உள்ள ஆர்சனிக், ஃபுளூரைடு, இரும்பு, உப்புத்தன்மை, நைட்ரேட் மற்றும் கன உலோகங்கள் ஆகியவற்றின் மாசுபாட்டால் குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை, 25,716 (1.51%) மட்டுமே. ஜல் சக்தி இயக்கத்தின் தொடக்கத்திலிருந்தே நீர் பாதுகாப்பு முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளது. இந்த விதிமுறைகளின்படி பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை கண்டிப்பாக உறுதி செய்ய மாநிலங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. மாநில அளவில் நீரின் தரம் குறித்த நடவடிக்கையை எளிதாக்க ஜல் சக்தி இயக்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தகவலை ஜல் சக்தித் துறை இணையமைச்சர் திரு பிரஹலாத் சிங் படேல் மாநிலங்களவையில் இன்று எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

– K. கலைமணி

# உயர்கல்வியில் தாய்மொழிக்கல்வி அவசியமா?




மத்திய பிரதேசத்தில் கடந்த அக்டோபர் 16-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில், உயிரி வேதியியல், உடற்கூறியல், மருத்துவ உடலியல் பாடங்கள் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு, அப்புத்தகங்கள் உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் வெளியிடப்பட்டன. மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்துப் படிப்புகளுமே உள்ளூர் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்கிற தேசிய கல்விக் கொள்கையின் ஓர் அங்கமாக, நாட்டில் முதல் மாநிலமாக மத்திய பிரதேசம் இதை முன்னெடுத்துள்ளது.

அவரவர் தாய்மொழியில் படிப்பது நல்ல விஷயமாகத் தோன்றலாம். அதற்கு முன் பல கேள்விகளுக்கு விடை காண வேண்டியுள்ளது.

ரஷியா, ஜப்பான், பிரான்ஸ், கியூபா, சீனா, ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் அவரவர் நாட்டு மொழிகளில்தான் மருத்துவம் உள்ளிட்ட படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன என்பது தாய்மொழி ஆதரவாளர்களின் வாதம். ஆனால், இதில் உள்ள மற்றோர் உண்மையையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

மேலே குறிப்பிட்ட நாடுகளில் சீனாவும், ரஷியாவும்தான் நம்மைவிட பரப்பளவில் பெரிய நாடுகள். சீனாவில் மட்டும்தான் நம்மைவிட மக்கள்தொகை அதிகம். மற்ற நாடுகள் எல்லாம் தமிழ்நாட்டை விட சற்றுக் கூடுதலாகவோ, குறைவாகவோ பரப்பளவும், மக்கள்தொகையும் கொண்ட நாடுகள்.

இந்த நாடுகளில் எல்லாம் ஒரே தேசிய மொழி இருப்பதுபோல, நமது நாட்டில் ஒரே தேசிய மொழி கிடையாது. மத்திய பிரதேசத்தை தொடர்ந்து ஹிந்தி பேசும் மாநிலங்களில் ஹிந்தியிலும், ஹிந்தி பேசாத மற்ற மாநிலங்களில் அவரவர் மாநில மொழியிலும் மருத்துவம், பொறியியல் உள்ளிட்டவை கற்பிக்கும்

முயற்சி முன்னெடுக்கப்படலாம். அது "மண்ணின் மைந்தர்'களுக்கு வாய்ப்பு என்கிற வாதத்தில் முடிந்து தேச ஒற்றுமைக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

இப்போது நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் நாட்டின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் மாணவர்கள் சேர்க்கை பெற முடியும். ஆனால், உள்ளூர் மொழியில்தான் கல்வி என்பது தீவிரமாக அமல்படுத்தப்படுமானால், அது மாணவர்களுக்கான அந்த வாய்ப்புக்கு முட்டுக்கட்டையாகிவிடும்.

மருத்துவத்தைப் பொறுத்தவரை, வகுப்பறைகளில் படிப்பதைவிட பொதுவெளியில் கிடைக்கும் தகவல்களே மருத்துவரை மேம்பட்டவராக ஆக்குகின்றன. சர்வதேச இதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள் உள்ளிட்டவற்றை மாணவர்கள் படிப்பது அவசியம். ஆங்கில அறிவு இல்லை எனில் இதில் சிக்கல் ஏற்படும். ஒரு குறிப்பிட்ட உள்ளூர் மொழி வழியில் படிப்பவர்கள் அந்த மாநிலத்தைவிட்டு வெளியே செல்வதற்கு தயங்குவார்கள் என்பதுடன், வெளிநாடுகளில் மேற்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பையும் அவர்கள் இழக்கக்கூடும்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 13 உறுப்புக் கல்லூரிகளில் வழங்கப்படும் தமிழ் வழி பொறியியல் (பி.இ.) படிப்புகளில் சேர மாணவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்பது தெரியவந்திருக்கிறது. இதுவரை நான்கு சுற்று கலந்தாய்வு நிறைவடைந்துள்ள நிலையில் சிவில் என்ஜினீயரிங் படிப்பில் மொத்தம் உள்ள 360 இடங்களில் 88 இடங்களே (24 %) நிரம்பி இருக்கின்றன. அதேபோன்று, மெக்கானிக்கல் என்ஜி-னீயரிங் படிப்பில் மொத்தம் உள்ள 429 இடங்களில் 84 மாணவர்கள்தான் (20 %) சேர்ந்துள்ளனர்.

தமிழ்வழியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில் உள்ள சிரமமும், பொறியியல் படிப்புகளின் மீதான மோகம் குறைந்துள்ளதுமே இதற்கு காரணங்கள் என பேராசிரியர்கள் கூறுகின்றனர். மேற்படிப்புகளுக்கான வாய்ப்பு இருக்காது என்கிற அச்சமும்கூட காரணமாக இருக்கக்கூடும். இதற்குத் தீர்வுதான் என்ன?

புரிந்துகொள்வதற்கு எளிது என்பதால் தாய்மொழியில் படிப்பது சிறந்தது என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வியாளர்களின் கருத்து. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி வழியிலேயே கற்பிக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை -2020 வலியுறுத்துகிறது. இதை கேந்திரிய வித்யாலயா தவிர, அந்தந்த மாநிலங்களில் இயங்கும் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சிபிஎஸ்இ பள்ளிகளில் முதலில் அமல்படுத்தலாம்.

மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் உள்ளூர் மொழியில் கற்பிப்பது தொடர்பாக ஒரு குறிப்பிட்ட கல்வி நிறுவனத்தில் சிறிய அளவில் முயற்சி செய்து (பைலட் புராஜெக்ட்) அதில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் கருத்தொற்றுமை கண்டு விரிவாக்கம் செய்யலாம். அதுவரை மருத்துவம், பொறியியல் போன்றவை ஆங்கில வழி-யிலேயே கற்பிக்கப்பட வேண்டும்.

மருத்துவ, பொறியியல் பாடங்கள் உள்ளூர் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு மாணவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். பயிற்று மொழி ஆங்கிலமாக இருந்தாலும் அந்த மொழிபெயர்ப்புகள் அவர்களுக்கு போதிய புரிதலை ஏற்படுத்தும்.

மருத்துவப் படிப்பு ஆங்கில வழியில்தான் கற்பிக்கப்படும் என தேசிய மருத்துவ கவுன்சில் ஏற்கெனவே அறிவித்துள்ள நிலையில், தாய்மொழியில் படிப்பு உடனடியாக அமலாவதற்கு சாத்தியம் இல்லை. ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டு தாய்மொழி அல்லது ஹிந்தியிலேயே கற்பிக்க வேண்டும் என்கிற கருத்து, எதிர்பார்க்கும் நன்மைக்கு பதிலாகக் கெடுதலை ஏற்படுத்திவிடலாகாது.

முதலில் தாய்மொழியில் சரியாக எழுதவும், பேசவும், படிக்கவும் தெரிந்த தலைமுறையை உருவாக்குவோம். அதற்குப் பிறகு உயர்கல்வியில் தாய்மொழிக் கல்வி குறித்து யோசிப்போம்!

– B.மணிகண்டன்



# அனைவருக்கும் நீதி கிடைப்பதில் பிராந்திய மொழிகளுக்கு முக்கிய பங்கு:

## மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு




சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் 12-வது பட்டமளிப்பு விழா 2022, டிசம்பர் 2ம் தேதி (இன்று) நடைபெற்றது. இதில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, தமிழக ஆளுநரும், இப்பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திரு ஆர்.என். ரவி ஆகியோர் பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர்.

விழாவில் உரையாற்றிய மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ, தர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற தாத்பரியத்தின் அடிப்படையில், சட்டக்கல்வி உருவாக்கப்பட்டதாக கூறினார். உலகமயமாக்கல் என்பது தற்போது மக்களின் கருத்துக்களை ஒருங்கிணைக்கும் ஆயுதமாக திகழ்வதாக குறிப்பிட்ட அவர், கல்வி நிறுவனங்கள், மாணவர்களை அறிவு ஜீவிகளாக உருவாக்குவதுடன், நீதி மற்றும் தர்மசாஸ்திரங்களை கற்றறிந்தவர்களாகவும் உருவாக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனை முன்னிறுத்தியே பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி, மத்திய அரசின் தேசிய கல்விக்கொள்கை 2020 உருவாக்கப்பட்டிருப் பதாக கூறினார். இதன்படி, சமுதாயத்தின் தேவையை அறிந்து சேவையாற்றக்கூடிய தனிமனித வளமிக்கவர் களாக இளைஞர்களை உருவாக்குவதே லட்சியமாக கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அனைத்து உயர்க்கல்வி நிறுவனங்களையும், பன்முகத் தன்மை கொண்ட மாணவர்களை உருவாக்கும், பன்முக நிறுவனங்களாக மாற்றவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அனைவருக்கும் நீதி கிடைக்க செய்வதில், உள்ளூர் மற்றும் பிராந்திய மொழிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என குறிப்பிட்ட கிரண் ரிஜிஜூ, சட்டம் மற்றும் அதன் செயல்முறைகளை பிராந்திய மொழிகளில் உருவாக்கும் நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றார். இதற்காக மத்திய அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, சட்ட ஆவணங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தைகளுக்கு பொதுவான சொற்களஞ்சியத்தை அனைத்து இந்திய மொழிகளிலும் உருவாக்கவும், சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்பான வார்த்தைகளை டிஜிட்டல் மயமாக்கி, பொதுமக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள உதவி செய்தல் உள்ளிட்ட பணிகளை மத்திய அரசு மேற்கொண்டு






வருகிறது என்று கிரண் ரிஜிஜூ குறிப்பிட்டார். நீதிமன்ற உத்தரவுகளை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில், உள்ளூர் மொழியில் வெளியிடப்பட உள்ளது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தர்மத்தை பாதுகாப்பதுடன், ஜனநாயகத்தை நிலைநாட்ட துணை நிற்க வேண்டும் என்று அரசியலமைப்பு சட்டம் நமக்கு போதிப்பதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்காத நிலை உருவாகக் கூடாது என்பதற்காக, அனைவருக்கும் இலவச சட்ட உதவி வழங்க ஏதுவாக கடந்த 2017-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நியாய பந்து சேவையை மத்திய அரசு தொடங்கியது. தற்போது, 14 உயர்நீதிமன்றங்களில் நியாயபந்து சேவைகளை வழங்க தனிப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கிரண் ரிஜிஜூ கூறினார். அனைத்து நீதிமன்றங்களிலும் 2.32 கோடி வழக்குகள் மெய்நிகர் விசாரணை மூலமாக விசாரிக்கப் பட்டதாகவும், உச்சநீதிமன்றத்தில் மட்டும், இதுவரை 3 லட்சம் வழக்குகள் மெய்நிகர் விசாரணை நடத்தப் பட்டதாகவும் கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றங்களில் அனைத்து அடிப்படை வசதி களையும் செய்து தர அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய தமிழக ஆளுநர் ஆர் என் ரவி, 2047ம் ஆண்டுக்குள் இந்தியா, உலகின் வழிகாட்டியாக திகழ்வதற்கான பிரதமர் நரேந்திர மோடியின் கனவை நனவாக்கும் முயற்சியில் இளைஞர்கள் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக சட்டத்துறை அமைச்சர் திரு எஸ் ரகுபதி, செயலாளர் திரு பி கார்த்திகேயன், பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு என் எஸ்.சந்தோஷ் குமார், பதிவாளர் ரஞ்சித் ஓமன் ஆபிரகாம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

- R.ஹரிகிருஷ்ணன்





**இந்த சமுதாயம் எனக்கு எதைக் கொடுத்ததோ, அதை திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.**

# - ரேகா டீச்சர்

முதன்முதலாக ரேகா டீச்சர்தான் அந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அந்தத் திட்டத்தின் காரணமாக அந்த அரசு பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். அப்படி என்ன திட்டம் அது?

அந்த பள்ளியில் புதிதாக வந்து சேரும் ஒவ்வொரு குழந்தைக்கும், அன்றைய தினமே அவர்களின் பெயரில் ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்து விடுகிறார் ரேகா டீச்சர். பத்து வருடங்களுக்கு பின், பள்ளி படிப்பை முடித்து விட்டு வெளியே வரும்போது, மேல் படிப்புக்கு உதவியாக, ஒரு கணிசமான தொகை அவர்கள் கைகளில் கிடைக்கும்படியான திட்டம் அது. எந்த அரசாங்கம் இந்த திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது? எந்த நாட்டு அரசும் அல்ல. ஒரு அரசு பள்ளி ஆசிரியையான ரேகா தனிப்பட்ட முறையில் செய்யும் அற்புதமான சேவை இது.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் இவர். 2010 ல் உடுப்பி அருகிலுள்ள அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியில் சேர்ந்தார். மிகமிகக் குறைவான பிள்ளைகளே அப்போது அந்த பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். மிகவும் பின்தங்கிய மக்கள் வசிக்கும் பகுதி அது.

ரேகா டீச்சர் அந்தப் பள்ளியில் வேலைக்கு சேர்ந்த பிறகு மாணவ மாணவிகள் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக கூட ஆரம்பித்தது. பிள்ளைகள் சந்தோஷமாக பள்ளிக்கு வர ஆரம்பித்தார்கள். பெற்றோர்களும் கூட மகிழ்ச்சியுடன் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள்.

இதற்குக் காரணம் ரேகா டீச்சர் செய்த இந்த புதுமையான விஷயம்தான். கல்வி அதிகாரிகள் ஆச்சரியப்பட்டு போனார்கள். ரேகா டீச்சரை அழைத்து பாராட்டினார்கள். "எப்படி டீச்சர் உங்களால் இது முடிகிறது? எதற்காக உங்கள் பணத்தை இந்த குழந்தைகளின் பெயரில் டெபாசிட் செய்கிறீர்கள்?"

இந்தக் கேள்விக்கு புன்னகையுடன் பதில் சொல்கிறார் ரேகா டீச்சர். "காரணம் இருக்கிறது. ஏனென்றால் நான் மிக சாதாரணமான குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண். என்னுடைய பள்ளிப் படிப்பு ஒன்றும் சுலபமானதாக இருக்கவில்லை. ஒரு சில தொண்டு நிறுவனங்களும் இன்னும் சில நல்ல உள்ளங்களும் உதவி செய்யவில்லையென்றால் கண்டிப்பாக என்னுடைய பள்ளிப்படிப்பை நான் முடித்து இருக்க முடியாது."

இதைச் சொல்லும்போது அவரையும் அறியாமல் ரேகா டீச்சரின் கண்களில் ஈரம் மின்னுகிறது. புடவை தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே தொடர்ந்து சொல்கிறார்.

"அப்படி எத்தனையோ பேர் செய்த அந்த உதவியினால்தான், பள்ளிப் படிப்பை முடித்து, ஒரு அரசு பள்ளியில் ஆசிரியையாக வேலைக்கு சேரவும் என்னால் முடிந்தது. அப்போதுதான் தீவிரமாக யோசித்து பார்த்தேன்.





இந்த சமுதாயம் எனக்கு எதைக் கொடுத்ததோ, அதை திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. அதனால்தான் 2014 ஆம் வருடத்திலிருந்து, என்னால் முடிந்த இந்த சிறிய சேவையை செய்து வருகிறேன். இன்றைக்கு ஒரு குழந்தையின் பெயரில் நான் டெபாசிட் செய்யும் ஆயிரம் ரூபாய், பத்து வருடம் கழித்து ஒரு கணிசமான தொகையாக அந்த குழந்தையின் கைகளில் கிடைக்கும். நிச்சயமாக அந்த குழந்தையின் அடுத்த கட்ட கல்விக்கு அந்த தொகை மிகப் பெரும் உதவியாக இருக்கும். இதுவரை 63 குழந்தைகளுக்கு இப்படி டெபாசிட் செய்திருக்கிறேன். இந்த ஆசிரியை பணியில் இருக்கும் வரை இந்த ஆயிரம் ரூபாய் டெபாசிட் முறையை நிச்சயமாக நான் தொடர்ந்து செயல்படுத்துவேன்."


இப்படி உறுதியோடு ஒலிக்கிறது ரேகா டீச்சரின் குரல். நம்பிக்கையோடு படித்துக் கொண்டிருக்கிறார்கள் ரேகா டீச்சர் வகுப்பில் உள்ள குழந்தைகள். நமக்கும் கூட இந்த மாதிரியான செய்திகள், எதிர்காலம் பற்றிய ஏதோ ஒரு நம்பிக்கையை தருகின்றன.

இந்த சமுதாயம் நமக்கு எதைக் கொடுத்ததோ, அதை திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமை நமக்கு நிச்சயமாக இருக்கிறது. இந்த பாடத்தை நமக்கு கற்றுக்கொடுத்த ரேகா டீச்சருக்கு நன்றி சொல்ல வேண்டிய கடமையும் கூட நமக்கு இருக்கிறது.

– S.**அன்புமணி**

# பீனியல் சுரப்பி (மூன்றாம் கண்) அதி அற்புத பணி

மனித உடல் ஓர் அற்புத படைப்பு. அதில் ஆச்சரியப்படத்தக்க பல அம்சங்கள் பொதிந்து உள்ளன. அதை அறிவதற்கு நமக்கு நேரமும் இல்லை,பொறுமையும் இல்லை. என்பதுதான் உண்மை. அதில் ஒன்றுதான் நமது உடலில் நேரத்தை தானாகவே ஒழுங்கு படுத்தும் உயிரியல் நேர முறைமை (Biological Clock System) இதனை வழி நடத்தும் ஒரு சுரப்பி நம் ஒவ்வொருவரின் தலையிலும் உள்ளது. அதுதான் மூன்றாவது கண் என்று எல்லோராலும் அழைக்கப்படும் பினியல் சுரப்பி!



நிலக்கடலை வடிவில் இருக்கும் இந்த PINEAL GLAND பார்வை நரம்புடன் இணைக்கப் பட்டுள்ளது. இது செய்யும் வேலைகளை பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம். ஆனால் முதலில் நாம் அறிய வேண்டியது என்னவென்றால் இந்த பினியல் சுரப்பி ஓர் அரிய பொருளை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சுரக்கிறது என்பதுதான். அதுதான் மெலடோனின் (melatonin).

இந்த அதிசய அரிய பொருளின் பலன் மகத்தானது! புற்று நோயைக் குணப்படுத்தும் இயற்கை மருந்து இந்தப் பொருளில் இருக்கிறது. மட்டுமல்லாது நம்மை நமக்கு புரியவைத்து தன்னம்பிக்கை எனும் தைரியத்தை அளிக்கிறது. மெலடோனின் சுரக்க வேண்டும் என்றால்; ஒரே ஒரு நிபந்தனை. இரவின் இருளாக இருக்க வேண்டும். இரவின் இருளில்தான் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்கும். இப்பொழுது புரிகிறதா? நம் முன்னோர்கள் பலர் ஏன் முன்னே உறங்கி முன்னே எழும் பழக்கம் வைத்திருந்தார்கள் என அவர்களின் வாழ்க்கைத் தரம், ஆரோக்கியம் என்பதைப் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மேலும் அவர்கள் அரிக்கேன் லைட்டை வைத்து வாழ்ந்து இரவு படுக்கும் போது இருளில் தான் தூங்குவார்கள்.

இருளில் தூங்கும் போது பீனியல் சுரப்பியுடன் இணைக்கப்பட்டுள்ள பார்வை நரம்பு மூலமாக; அது இரவின் இருளை அறிந்து கொள்ளும். ஒவ்வொரு நாளும் இரவு 10 மணிக்குப் பிறகு இருளில் சுரக்கும் “மெலடோனின்”, நமது இரத்த நாளங்களில் ஆசுவாசமாக பாய்ந்தோடும். நமது கண்கள் வெளிச்சத்தில் பட்டுக் கொண்டிருந்தால் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்காது.

பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்க ஆர்மபித்து காலை 5 மணிக்கு நிறுத்தி விடும். இரவு நீண்ட நேரம் கண் விழித்திருந்தால் நாம் புற்று நோயைக் குணப்படுத்தும் மெலடோனின் என்ற இயற்கை மருந்தை இழந்தவர்களாக இருப்போம்.

எனவே இரவு முன்கூட்டியே உறங்கி அதிகாலையில் எழுவது புற்று நோயைத் தடுக்கும் என்றும், மற்றும் பல நல்ல செயல்கள் செய்யும் எனவும் இயற்கை மருத்துவ உலக சித்தர்கள் நூல் கூறுகிறது.

அதேபோன்று, அதிகாலையில் காற்று வெளி மண்டலத்தில் ஓஸோன் நிறைந்திருக்கும். ஒரு மனிதன் அதிகாலையில் எழுந்து நடமாட ஆரம்பித்தால், இந்த ஓஸோன் காற்றை அவன் சுவாசிப்பான். இது நமது உடலிலுள்ள நோய்களைக் குணப்படுத்தி, நம் ஆயுளை அதிகரிக்கும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இரவு முன்கூட்டியே உறங்குவதால்; மெலடோனின் கிடைக்கிறது. அதிகாலையில் எழுந்து அலுவல்களைத் துவங்குவதால்; ஓஸோன் கிடைக்கிறது. நமது உடலின் ஆரோக்கியம் அனைத்தும் இவற்றில் அடங்கியிருக்கிறது. அதிகாலையின் சில மணி நேரங்கள் அந்த நாளின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியவையாக இருக்கின்றன. அதிகாலையில் எழும் போது; நமது மூளையும், இன்னும் பிற உறுப்புகளும் பூரண ஓய்வு பெற்று வேலை செய்ய தயாராக இருக்கும். அந்த நேரத்தில் செய்யும் பணிகள் அனைத்தும் திறமை மிக்கதாகவும், ஆற்றல் அழுத்தம் மிக்கதாகவும் திகழும்.

எனவே முன் எழுந்து முன் மறையும் அதிசய மெலடோனினைப் பெறவும், அதிகாலைப் பொழுதின் ஓஸோனைப் பெற்று பயனடைவோம். முன் படுத்து முன் எழுவோம். பீனியலை பாதுகாப்போம். மெலடோனினை முழுமையாக பெறுவோம்.

– B. சரவணன்

# இதயங்களை இணைக்க ஒருவருக்கொருவர் அஞ்சல் அட்டைகளை அனுப்புங்கள்




ஒருவரையொருவர் இணைப்பதற்கு ஒரு தனித்துவம் மிக்க வழியை மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் டாக்டர். சுபாஷ் சர்க்கார் விளக்கினார்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த கல்வி தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணை அமைச்சர், "காசி தமிழ்ச் சங்கம் ஒருவரையொருவர் இணைக்கும் ஊடகமாக மாறியுள்ளது. இந்த பிணைப்பை வலுப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் அஞ்சல் அட்டைகளை அனுப்ப வேண்டும். அஞ்சல் அட்டை நாம் ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பதை உணர வைக்கும்" என்றார்.

தமிழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தனது முகவரி எழுதப்பட்ட அஞ்சல் அட்டைகளை மத்திய இணை அமைச்சர் வழங்கினார். ஆசிரியர்களும் தங்களின் முகவரிகளை எழுதி, மத்திய இணை அமைச்சரிடம் கொடுத்தனர். அனைத்து ஆசிரியர்களுக்கும் பதில் அளிப்பதாகவும், அவர்களின் பதிலுக்காக காத்திருப்பதாகவும் மத்திய இணையமைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க்கார் கூறினார்.

– S.தமிழ் வீரன்


## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

### FORM IV ( See Rule 8)

| | |
|---|---|
| 1. Place of publication | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 2. Periodicity | : Monthly |
| 3. Printer Name | : NV SIVASHANKAR |
| (a) Whether Citizen of India | : Yes |
| (b) Nationality | : Indian |
| (c) Address | : J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. |
| 4. Publisher Name | : NV SIVASHANKAR |
| (a) Whether Citizen of India | : Yes |
| (b) Nationality | : Indian |
| (c) Address | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 5. Editor Name | : RATHIKA S |

I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 10.12.2022

NV SIVASHANAKR
Publisher

# ஆண்களே! புரிந்து செயல்படுங்கள்!

சிறுகதை

இரண்டு மன்னர்களுக்குள் சண்டை. தோற்றவனிடம் வென்றவன் சொன்னான்.

"நான் கேட்கும் ஒரு கேள்விக்கு, சரியான பதிலைச் சொன்னால், உன் நாடு உனக்கே".

கேள்வி: ஒரு பெண், தன் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாள்?

(வென்ற மன்னனின் காதலி, அவனிடம் இக்கேள்வியைக் கேட்டு விட்டு, விடை சொன்னால்தான், நமக்கு திருமணம் என்று சொல்லியிருந்தாள்).

தோற்ற மன்னன், பலரிடம் கேட்டான். விடை கிடைக்கவில்லை. கடைசியாக சிலர் சொன்னதால், ஒரு சூனியக்காரக் கிழவியிடம் சென்று கேட்டான்.

அவள் சொன்னாள்: விடை சொல்கிறேன். அதனால், அந்த மன்னனுக்குத், திருமணம் ஆகும். உனக்கு உன் நாடு கிடைக்கும். ஆனால் எனக்கு என்ன கிடைக்கும்?.

அவன் சொன்னான், "என்ன கேட்டாலும் தருகிறேன்".

சூனியக்காரக் கிழவி, விடையைச் சொன்னாள், "தன் சம்பந்தப்பட்ட முடிவுகளை, தானே எடுக்க வேண்டும் என்பதே, ஒரு பெண்ணின் ஆழ்மனது எண்ணம்".

இப்பதிலை அவன் ஜெயித்த மன்னனிடம் சொல்ல, அவன் தன் காதலியிடம் சொல்ல, அவர்கள் திருமணம் நடந்தது. இவனுக்கு நாடும் கிடைத்தது.





அவன் சூனியக்கார கிழவியிடம் வந்தான். வேண்டியதைக் கேள் என்றான்.

அவள் கேட்டாள். "நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்".

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அவன் ஒப்புக் கொண்டான். உடனே கிழவி ஒரு அழகிய தேவதையாக மாறிக் காட்சி அளித்தாள்.

அவள் சொன்னாள், "நாம் வீட்டில் தனியாக இருக்கும்போது நான் கிழவியாக இருந்தால், உன்னுடன் வெளியே வரும்போது தேவதையாக இருப்பேன். ஆனால் நான் வெளியே உன்னுடன் வரும்போது, கிழவியாக இருந்தால், வீட்டில் உன்னுடன் அழகிய தேவதையாக இருப்பேன். இதில் எது உன் விருப்பம்?" என்றாள்.

அவன் சற்றும் யோசிக்காமல் சொன்னான். "இது உன் சம்பந்தப்பட்ட விஷயம். முடிவு நீ தான் எடுக்க வேண்டும்" என்று.

அவள் சொன்னாள், "முடிவை என்னிடம் விட்டு விட்டதால், நான் எப்போதும் அழகிய தேவதையாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்!" என்றாள்.

ஆம்! பெண், அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும்போது, தேவதையாக இருக்கிறாள். முடிவுகள், அவள் மீது திணிக்கப்படும் போது, சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள். அனைவரும் புரிந்து செயல்படுங்கள்!.

– V. கவியரசன்

Printed by **NV SIVASHANKAR** and Published by **NV SIVASHANKAR** on behalf of PENA KURAL, Tamil Monthly and Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: **RATHIKA S**.

Ministry of Education
Government of India

Azadi Ka Amrit Mahotsav



# PM SHRI

## PM ScHools for Rising India

*Empowering students with 21st century skills*

- More than 14500 Schools across the country to emerge as Exemplar Schools
- Centrally sponsored scheme (PM SHRI Schools) will be for a period of 5 Years i.e. 2022 - 2027
- PM SHRI schools will showcase all the components of NEP 2020
- Total project cost - Rs. 27360 crore over a period of 5 years
- Total Central share will be Rs. 18128 crore



@EduMinOfIndia @EduMinOfIndia HRDMinistry @eduminofindia











வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ம் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3690/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.